பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 12 திங்கட்கிழமை 25.01.2021 கதிர் 81

**இனி இது ரகசியம் அல்ல!**

இலங்கை விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்கும் அறிக்கையின் விடயதானங்கள் வெளியே கசிந்து பக்கம்02 »

# புதிய அரசமைப்புக்கான முதல் வரைவு அடுத்த ஒரு மாதத்தில் நாடாளுமன்றில்!



## நீதி அமைச்சர் அலி சப்ரி தகவல்

கொழும்பு, ஜனவரி. 25

இலங்கையின் புதிய அரசமைப்புக்கான முதற்கட்ட வரைவை இன்னும் ஒரு மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியுமாக இருக்கும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். 2

## புதிய அரசமைப்பில் காதி நீதிமன்று 'அவுட்'

### அமைச்சர் சரத் வீரசேகர கூறுகின்றார்



இலங்கையில் முஸ்லிம் சட்டமான காதி நீதிமன்றம் செயற்படுவதை அரசு விரும்பவில்லை எனவும் புதிய அரசமைப்பில் காதி சட்டத்தை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கும் எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் 2

## மட்டக்களப்பில் நீரில் மூழ்கி இரு மீனவர்கள் உயிரிழப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு வேறு சம்பவங்களில் மீனவர்கள் இருவர் நீரில் மூழ்கி சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கொம்மாந்துறை தீவு, 2

## காவலில் இருக்கும் இந்திய மீனவருக்கு வைரஸ் தொற்றுறுதி!

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்படைத்தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் 09 பேரில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை பரிசோதனைக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 11

## காதி நீதிமன்றை நீக்கவே முடியாது

### நீதி அமைச்சர் அலி சப்ரி அதிரடி

முஸ்லிம் திருமணப் பிணக்குகளைத் தீர்க்கின்ற காதி நீதிமன்றம் இலங்கை அரசமைப்புக்கு ஊடாக உருவாக்கப்பட்டது. இது புதிய அரசமைப்பில் நடைமுறையில் இருக்கும். இதை நீக்க முடியாது.

– இவ்வாறு நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

சுமார் 72 2

## கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் சாவு!

### அளவெட்டியில் துயரம்

(ந.லோகதயாளன்)

அளவெட்டிப் பகுதியில் அமைந்திருந்த ஒரு பழைய கட்டடத்தை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளி மீது கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச்சம்பவத்தில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த மகாதேவன் பிரகலாதன் (வயது 40) என்னும் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை 4 மணியளவில் குறித்த அனர்த்தம் இடம்பெற்றது. பாதிக்கப்பட்டவர் உடனடியாக தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

எனினும், குறித்த நபர் வைத்தியசாலையில் 2

## மனோ அணியை பிளக்க முயற்சியாம்

தமிழ் முற்போக்கு கூட்டணியை பிளக்க, இந்த அரசு விலை பேசி, வலை வீசுகின்றது.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியைப் பிளக்கும் எவரையும் நான் மன்னிக்க மாட்டேன். தமிழ்ப் பேசும் இலங்கை சமூகமும் மன்னிக்காது என 2

## சங்கிலியைக் கொள்ளையிட்ட இளைஞன் வசமாக மாட்டினார்

(எஸ்.நிதர்ஷன்)

கல்வியங்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தாய், மகளிடம் சங்கிலியைக் கொள்ளையிட்ட இளைஞன் ஒருவர் யாழ். மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை நேற்று 2

## இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டமை ஏற்றுக்கொள்ளக் கூடிய சம்பவம் அல்ல

### சுரேஷ் பிறேமச்சந்திரன் விசனம் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் வள்ளம் மூழ்கடிக்கப்பட்டமையும் அதில் நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டமையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயங்கள் அல்ல.

ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு விசனம் தெரிவித்திருக்கின்றார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியா எமது அருகில் இருக்கக் கூடிய நாடு. பாக்கு நீரிணையில், மன்னார் வளைகுடாவில் இந்தப் பகுதியில் 2



## தமிழர்கள் தரப்பு ஒன்றுபட்டு செயற்பட நடவடிக்கைக் குழு

### சிவாஜிலிங்கம் தகவல்

ஒட்டுமொத்த தமிழ் இனமும் ஒரே நிலைப்பாட்டில் செயற்படுவதற்காக விரைவில் நடவடிக்கை குழு ஒன்றை உருவாக்குவதற்கு இன்றைய கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் அதிகமாக உள்ள பகுதிகளில் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்கும் வகையில் அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைத்து அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. 11

## 58 ஆயிரத்தைத் தாண்டியது கொரோனாத் தொற்றாளர்!

### நேற்றும் 841 பேர் அடையாளம்



இலங்கையில் நேற்றும் 841 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா 2

## மேலும் மூவர் மரணம் கொரோனா சாவு 283

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுப் பதிவாகிய உயிரிழப்புகளுக்கமைய நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 283 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 270 பேர் மூன்றாவது அலையில் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெரும்பரபரப்பைஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த விடயத்தை ஒட்டிக் கடந்த வாரத்துக்கு முந்திய வாரம் தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்களும் சேர்ந்து கையளித்த கோரிக்கைக் கடிதம் இந்தச் சமயத்தில் சிலாகிக்கப்படுகின்றது.

அந்தக் கடிதத்தில் தமிழர் தரப்பு முன்வைத்த கோரிக்கைகளை அங்கீகரித்துப் பிரதிபலிப்பது போலவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கை அமைந்திருப்பது தமிழர் தரப்புக்கு மிகவும் சாதகமான அம்சம் எனலாம்.

தமிழர் தரப்பின் கோரிக்கையை ஏற்று, இலங்கை தொடர்பான தமது உத்தேச பிரேரணையில் வெற்றிகரமாக அதில் இடம்பெறச் செய்வதில் அங்கத்துவ நாடுகள் முனைப்புக் காட்டுமா, அல்லது தமிழர் தரப்பின் கோரிக்கையும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அவதானிப்பையும் தமது பிரேரணையில் அவை சேர்க்காமல் ஒதுக்குமா என்பவை எல்லாம் இனிமேல்தான் தெரியவரும்.

அதனால் இம்முறை இதுவரை ஜெனிவா விடயம் தமிழர் தரப்புக்கு திருப்தியாகத்தான் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

So far so good. இனி நடப்பதும் நல்லதாக நடக்கும் என்று நம்புவோம்.

★ ★ ★

தமிழரின் உரிமைப் போராட்டம் எழுச்சியாகத் தொடர வேண்டும் என்றால் அதைத் தொய்ய விடாது கொதிநிலையில் வைத்திருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டி வந்திருக்கிறேன்.

தலைவர் பிரபாகரன் 2009 மே நடுப்பகுதி வரையில் விடுதலைப் போராட்டத்தைப் பெரும் கொதிநிலையிலேயே வைத்திருந்தார். அதனால் தமிழர்களின் நியாயபூர்வமான கோரிக்கைகள், அபிலாஷைகள், வேணவாக்கள் உலகின் காதில் கேட்டுக் கொண்டிருந்தன.

இப்போது எல்லாம் மங்கி அடங்கிப் போய் விட்டன.

தமிழர்களின் தேசிய தரப்பில் அரசியல் தலைமை ஏற்றிருப்போர் உரிமைப் போராட்டம் கும்பகர்ணப் படலமாக தூங்கி, அடங்கி விட விட்டுவிட்டார்கள் என்பது என் குற்றச்சாட்டு.

அஹிம்சை வழியிலும் – அறநெறியிலும் – காந்தீய மார்க்கத்திலும் – மக்கள் போராட்டத்தைக் கொதிநிலையில் வைத்திருக்க முடியும்.

அறுபதுகளில் தந்தை செல்வநாயகத்தினால் அதனை செய்துகாட்ட முடிந்தது.

தளபதி அமிர், தேசியத் தலைவர் பிரபாகரன் போன்றோருக்குப் பின்னால் தமிழரின் எழுச்சிப் போராட்டத்தை அதிர்வுள்ளதாக மாற்றும் தலைமைகள் நம் மத்தியில் இல்லை என்று நான் விசனம் தெரிவித்து வந்தேன்.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையில் – அனைத்துத் தரப்புக்களையும் ஒன்றிணைக்கும் விதத்தில் – நேற்று நல்லூர் இளம் கலைஞர் கலா மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கட்சித் தலைவர்கள், பிரதிநிதிகள் பேசிய பேச்சில் நம்பிக்கை சிறிது துளிர்த்துள்ளது.

தமிழர் உரிமையை நிலை நிறுத்துவதற்காக சிறை நிரப்புப் போராட்டத்துக்கும் அவர்கள் தயார் என்ற மாதிரி உரைகள் இருந்தன. நல்லது.

தேர்தல்கள் மூலம் பதவிகளைக் கொடுத்து இருக்கைகளுக்கு சூடேற்றும் வேலையைத் தவிர்த்தீர்களானால் உண்மையில் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் வெடிக்கும் என்று ஒரு சின்ன எதிர்வுகூறிலை வெளியிட்டியிருந்தேன். இப்போதைய சீற்றப் பேச்சுக்களும், எழுச்சி உரைகளும் அதன் விளைவுதான் போலும்.

ஆனால் அவை களத்தில் – தளத்தில் – நிறைவேறுமா, பயன்தரு பெறுபேறாக அமையுமா என்பது சந்தேகம் தான்.

எல்லோரும் நமது 'பயர் பிராண்ட்' சிவாஜிலிங்கம் போல எல்லாவற்றுக்கும் தயாராக இருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. உரிமைக்காக உரத்துப் பேசினாலும், அதற்காகத் துணிச்சலுடன் களமிறங்க பின்நிற்க மாட்டார் சிவாஜிலிங்கம். நடிப்புலக மேதையின் பெயரை அவர் வைத்திருந்தாலும் இவ்விடயத்தில் அவரின் வாய் வீச்சு, நடிப்பு அல்ல. அது அடிமனதில் இருந்து வருவது.

ஆனால் அவர் தவிர எத்தனை தமிழ்த் தலைவர்கள் உரிமைப் போராட்டத்தை அறவழியில் உயிர்ப்புடனும் உஷாருடனும் நடத்தத் தயாராக இருக்கின்றனர்?

அதுவும் தொல்பொருள் சின்னங்கள், மரபுரிமை தொடர்பான விடயங்களில் கைதுகளுக்கு வழக்கு முடியும் வரை பிணை இல்லை என்ற யதார்த்த நிலைமை நேற்றைய கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட பின்னர் இந்தப் போராட்டத்தை அதிர்வுடையதாக மாற்ற – கொதிநிலைக்கு எடுத்துச் செல்ல – எத்தனை பேர் தயார்?

'போராட்டம் வெடிக்கும்', 'போராட்டம் வெடிக்கும்' – என்று அடிக்கடி உசுப்பேற்றிய தலைவர்கள் தாம் இதற்கு செயலில் பதில் கூறவேண்டும்.

– மின்னல் –

## காதி நீதிமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஆண்டுகளாக இந்த நீதிமன்றக் கட்டமைப்பு இருந்து வருகின்றது என்றும் அவர் சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கூறியுள்ளார்.

அரசமைப்பு ஊடாக அமைக்கப்பட்ட சுயாதீன நீதிச்சேவைகள் ஆணைக்குழு ஊடாக இந்த நீதிமன்றம் உள்ள நிலையில் அவற்றின் நீதிபதிகள் வெற்றிடம் தகுந்த முறையில் நிரப்பப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## சங்கிலியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்தினம் மாலை அறுத்துச் சென்ற இளைஞர், அதனை விற்றுவிட்டு அதிதிறன் கொண்ட இரண்டு அலை பேசிகளை வாங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் வயோதிப் பெண்ணும் அவரது மகளும் நேற்றுமுன்தினம் மாலை மோட்டார் சைக்கிளிலில் பயணித்துள்ளனர். அவர்களைப் பின்தொடர்ந்த ஒருவர் தாயாரின் கழுத்திலிருந்த இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு தப்பித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யபட்டது. அதுதொடர்பில் தகவல் அறிந்த யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி, விசாரணைகளை முன்னெடுத்தார். சம்பவ இடத்துக்கு அண்மையாக உள்ள சி.சி.ரி.வி. பதிவின் அடிப்படையில் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டார்.

கொக்குவிலைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் நேற்று முற்பகல் கைது செய்யப்பட்டார். அவரது உடைமையில் இருந்து 75 ஆயிரம் ரூபா மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியுடைய அதிதிறன் அலைபேசிகள் 2, 90 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டன.

சங்கிலியை விற்பனை செய்து அலைபேசிகள் இரண்டையும் சந்தேகநபர் வாங்கியுள்ளார். அவர் போதைக்கு அடிமையானவர் என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபர் யாழ். மாவட்ட சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## புதிய அரசமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவர் மேலும் தெரிவித்ததாவது: –

இலங்கையில் சகல மக்களுக்கும் ஒரே சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தமக்கு ஏற்றால் போல் சட்டங்களை உருவாக்கி சமூக முரண்பாடுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தக்கூடாது.

காதி நீதிமன்றக் கட்டமைப்பை முஸ்லிம் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் விரும்பவில்லை. காதி நீதிமன்ற தீர்ப்புகள் குறித்து பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதுவரை காலம் நடைமுறையில் இருந்த சட்டங்கள் பற்றி நாம் கவலைப்படவில்லை. ஆனால், இனிமேல் நாட்டுக்கு ஏற்ற ஒழுக்கக்கோவை ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதை அரசு விரும்புகின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையில் இதற்குப் பூரண ஒத்துழைப்புகள் உள்ளன – என்றார்.

## புதிய அரசமைப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தற்போது அரசமைப்பின் முதற்கட்ட வரைவுஹ் அது தொடர்பான நிபுணர்கள் குழுவினரால் தயாரிக்கப்பட்டு வருகின்றது எனவும், அந்தப் பணிகள் முடிவடைந்ததும் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள ஊடகமொன்றுக்குப் புதிய அரசமைப்பு தயாரிப்புப் பணிகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பைத் தயாரிக்கும் நிபுணர் குழுவினர் தமது வரைவுப் பணிகளுடன் இணைந்ததாக தற்போது அரசியல் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் கருத்துக்களைப் பெற்று வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் பணிகளுக்காகக் கடந்த செப்டெம்பர் மாதத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான மனோஹர த சில்வா, காமினி மாரப்பன, சஞ்சீவ ஜயவர்தன, சமந்த ரத்வத்த ஆகியோரும் பேராசிரியர்களான நதீமா கமுர்தீன், ஜீ.எச் பீரிஸ், வசந்த செனவிரத்ன மற்றும் கலாநிதி ஏ.சர்வேஸ்வரன் ஆகியோரை உள்ளடக்கிய 9 பேர் கொண்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் நீரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பிரப்பம் வளைவு பகுதியில் உள்ள வீதியில் குழிக்குள் குடும்பத்தோடு வீழ்ந்து மூழ்கிய மீனவர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வந்தாறுமூலையில் வசிக்கும் பேதுறு சிவராசா (வயது 62) என்பவரே சேறும் சகதியும் நிறைந்த குழிக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டவராகும்.

இவர் தனது மனைவி மற்றும் 9 வயது 13 வயதுடைய பேரப்பிள்ளைகள் இருவருடனும் வழமையாக மீன்பிடித் தொழில் செய்து வருபவர் என்றும், சம்பவதினம் அந்தக் குடும்பத்தினர் பிரப்பம் வளைவுப் பகுதியிலுள்ள வீதியைக் கடந்தபோது அங்கு நீர் நிரம்பியிருந்த வீதியிலுள்ள ஆழமான குழிக்குள் சேற்றில் மூழ்கியுள்ளார்.

வீதியால் தனது 9 வயதுப் பேரனை சுமந்து கொண்டு சென்ற கணவர் வீதியில் இருந்த குழிக்குள் விழ பின்னால் வந்த மனைவியும் வீழ்ந்துள்ளார்.

இதனை அறிந்த மூன்றாவதாக வந்த 13 வயதான பேரன் தனது தம்பியின் தலைமுடி நீருக்கு வெளியே தெரியவர அவரைப் பிடித்திழுத்து வெளியே கொண்டு வந்து விட்டு பாட்டியின் தலைமுடியையும் பிடித்திழுத்து காப்பாற்றிவிட்டு பாட்டனாரைத் தேடியபோது அவர் காணாமல் போயுள்ளார்.

சிறுவன் அப்பகுதியில் கூச்சலிட்டு அயலில் நின்றவர்களை அழைத்து அவர்களின் உதவியுடன் தேடிய பொழுது குறித்த நபர் சடலமாகவே மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, மட்டக்களப்பு பதுளை வீதியை அண்டிய உறுகாமம் புதூர் துறையடியில் மீன்பிடிப்பதற்காகத் தோணியில் சென்ற இளம் மீனவர் ஒருவர் நேற்று காணாமல் போயிருந்தார்.

உறுகாமம், புதூர் கிராமத்தைச் சேர்ந்த சீனிமுஹம்மது அப்ரார் (வயது 24) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு குளத்தில் மூழ்கியவராவார்.

நண்பகலளவில் மீன் பிடிக்கச் சென்றவர் காணமல்போயுள்ள தகவல் மாலையளவிலேயே தெரிந்ததும் உறவினர்களும் மீனவர்களும் தேடுதலில் ஈடுபட்டனர். எனினும், நேற்று பிற்பகல் கடற்படை சுழியோடிகள் இவரது சடலத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

இவ்விரு சம்பவங்கள் குறித்தும் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## 58 ஆயிரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 58 ஆயிரத்து 430 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 423 பேர் நேற்றுகுணமடைந்துவீடுதிரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 49 ஆயிரத்து 684 பேர் குணமடைந்துள்ளதுடன், 8 ஆயிரத்து 466 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இந்திய மீனவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இருந்தும் இந்தியாவில் இருந்தும் தமிழ் மக்கள்தான் மீன் பிடிக்கிறார்கள்.

ஆகவே, எமது கடற் பரப்புக்குள் அவர்கள் வருவதும் அவர்களது பரப்புக்குள் நாங்கள் போவதும் காலாதி காலமாக நடைபெற்று வந்துள்ளது.

ஆனால், தற்போது இந்திய மீனவர்களின் வள்ளம் மூழ்கடிக்கப்பட்டதும் அதில் நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டதும் ஏற்றுக்கொள்ளள்கூடிய விடயங்கள் அல்ல. இலங்கைக் கடற்படையினுடைய கப்பலில் அடிபட்டுத்தான் மீனவர்களின் படகு மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான நடவடிக்கை ஏற்புடையது அல்ல. நான்கு மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் அல்லது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்கள். எனவே, நிச்சயமாக இது அனுதாபத்துடன் பார்க்கப்பட வேண்டிய விடயம்.

எமது கடந்த காலப் போராட்டத்தில் இந்தியத் தமிழர்களுடைய அதிலும் குறிப்பாக, மீனவர்களுடைய பங்கு என்பது அளப்பரியது. அதனை நாம் மறுப்பதற்கில்லை.

மீனவர்கள் அத்துமீறும் போது கைதுகள் நடந்திருக்கின்றன. அவ்வாறே தற்போதும் நடந்திருக்கலாம். ஆனால், அதற்கு மேலதிகமாகச் சென்று நான்கு மீனவர்கள் நீரில் மூழ்கி இறந்திருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

இந்நிலையில், இலங்கை அரசாங்கம் இதுபோன்ற பிரச்சினைகள் இனிமேல் நடைபெறாமலிருக்க குறைந்தபட்சம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை, தாய்லாந்து, சீனா, தாய்வான் போன்ற பல நாடுகள் இலங்கையின் கடல் வளத்தைச் சூறையாடுகின்றன. அதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி அளித்திருக்கின்றது.

ஆகவே, அவ்வாறானவர்கள் எமது கடல்வளத்தைச் சூறையாடுகின்றார்கள் என்பதுதான் உண்மை. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது கொழும்பு அரசாங்கமே. ஆனால் அவை தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுத்ததில்லை.

எனினும், வட கடலில் பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா கடலில் இந்திய தமிழ் மீனவர்களும் வடக்கு மாகாண தமிழ் மீனவர்களும் தொடர்ச்சியாக மீன் பிடிப்பதென்பது தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது.

அவை, சுமூகமாகப் பேசித் தீர்க்க வேண்டியதாகும். இதனை இரு தரப்பு மீனவர்கள், இரு தரப்பு அரசாங்கங்கள் இணைந்து பேச்சுகள் மூலம் தீர்க்க வேண்டும். இதனைவிடுத்து வேறு நடவடிக்கைகளை எடுப்பதென்பது தவறானது.

இதேவேளை, எமது அனைத்து தமிழ் மக்களின் அனுதாபங்களும் இறந்த தமிழக மீனவர்கள் மேல் நிச்சயமாக உண்டு. – என்று தெரிவித்துள்ளார்.

## கட்டடம் இடிந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேர்க்கப்படும்போதே உயிரிழந்திருந்ததை மருத்துவர்கள் உறுதி செய்த நிலையில் தெல்லிப்பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## மனோ அணியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நம்புகிறேன். என் மீது நம்பிக்கை கொண்ட அனைத்து நண்பர்களும் எம்மோடு கரங்கோர்க்க வேண்டுகிறேன். – என்றார்.

# நாட்டின் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது!

## ஜனாதிபதி, பிரதமருக்கு விமல் புகழாரம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் கடந்த காலத்தில் மிகவும் சிக்கலான பல சவால்களை வெற்றிகொள்ள முடிந்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்ததோடு மாத்திரமன்றி, சஹ்ரான் தலைமையிலான பயங்கரவாத செயற்பாடு மீண்டும் தலைதூக்க முடியாத வகையில் இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

செத்சிறிபாய மூன்றாவது கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த அரசாங்கம் எப்.சி.ஐ.டி என்ற சட்டவிரோத பொலிஸ் பிரிவைப் பயன்படுத்தி அரச ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டமையுடன் அவர்கள் பணிபுரிய முடியாத சூழ்நிலையொன்றை உருவாக்கியது.

எனினும் அவர்கள் எவ்வித அச்சமும் சந்தேகமுமின்றி செயற்திறன் மிக்க வகையில் மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சூழ்நிலையை நாம் தற்போது ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றோம்.



தற்போது அடிக்கல் நாட்டப்பட்டமையைப் போன்று புதிய கட்டடத்தொகுதிகளுக்கான அடிக்கல் நாட்டும்போது சமூகவலைத்தளங்களில் அதுதொடர்பில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இது வெறுமனே கட்டடமொன்றை நிர்மாணிப்பது மாத்திரமல்ல. அதன் பின்னர் அங்கு பணிபுரியும் அரச சேவையாளர்களுக்கான வசதிகள் உயரும் போது மக்கள் பெறும் சேவையின் தரமும் செயற்திறனும் மேம்படும். அது நாட்டின் பொருளாதாரத்தில் நேர் மறையான விளைவை ஏற்படுத்தும்.

கடந்த காலங்களில் எதிர்கொள்வதற்கு மிகவும் சிக்கலான சவால்களைக் கூட மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமைத்துவத்தின் கீழ் வெற்றிகொள்ள முடிந்தமை தொடர்பில் நாட்டு மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்ததோடு மாத்திரமன்றி, கடந்த காலத்தில் இடம்பெற்ற சஹ்ரான் தலைமையிலான பயங்கரவாத செயற்பாடு மீண்டும் தலைதூக்க முடியாத வகையில் இப்போது நாட்டின் தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோன்று போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் முறியடிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் அச்சமும் சந்தேகமுமின்றி வாழக்கூடிய சூழலொன்றை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம் என்று குறிப்பிட்டார்.

## தம்மிக்க பாணி தொடர்பாக இறுதி முடிவு இரு வாரத்தில்!

கொரோனா வைரஸ் தடுப்புக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தம்மிக்க பாணி தொடர்பாக எதிர்வரும் ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் இறுதி முடிவை அறிவிக்க எதிர்பார்ப்பதாக ஔடத தயாரிப்பு மற்றும் ஒழுங்குப்படுத்தல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற மருந்து உற்பத்திகளை ஆய்வு செய்ய அரசாங்கம் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான மருந்து உற்பத்திகளை ஊக்குவிப்பது அரசாங்கத் தின்நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் தெரிவித்த அவர் –

கேகாலை தம்மிக்க பண்டார தயாரித்த கொவிட் ஒழிப்பு உள்நாட்டு மருந்து உள்ளிட்டவைகள் தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் இடம்பெறுகின்றன.



அவை தொடர்பான பரிசோதனைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே அரசாங்கம் என்ற வகையில் எமது கடமை. அவ்வாறு இல்லாது எந்தவொரு மருந்து உற்பத்தியும் ஊக்குவிக்கப்படாது. இதன் நன்மை, தீமைகளை நாட்டுக்கு அறிவிப்போம். தம்மிக்க பண்டார தயாரித்த பாணி தொடர்பாக இன்னும் இரண்டு வாரங்களில் இறுதி முடிவு எடுக்க முடியும் என நம்புகின்றேன்.

ஒக்ஸ்போட் தயாரிப்பான அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசி முதன் முதலில் இலங்கைக்கு கிடைக்கும். அதன் பின்னர் சீனாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசியை பெற்றுக்கொள்வோம்.

இதற்கிடையில் ரஸ்ய தடுப்பூசி பெறுவதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன. பற்றாக்குறை ஏற்படின் அவற்றை பணம் கொடுத்து வாங்க நடவடிக்கை எடுப்போம்.- என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 326 இலங்கையர் நாடு வந்தடைவு!

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 326 பேர் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

6 விமான சேவைகள் மூலம் அவர்கள் நாட்டை வந்தடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, டுபாயில் இருந்து 152 இலங்கையர்களும் மாலைதீவில் இருந்து 70 இலங்கையர்களும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அத்துடன், கற்றல் மற்றும் தொழில் நிமித்தம் 425 பேர் குறித்த காலப் பகுதியில் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சிறைக் கொத்தணி தொற்றாளர் வீழ்ச்சி!

சிறைச்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகுபவர்களின் தொகை குறைந்து வருகிறது. கடந்த (சனிக்கிழமை) 8 தொற்றாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டனர் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறைச்சாலைகளில் கொரோனா தொற்றுக்குள்ளாகுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது. சனிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலத்திற்குள் 8 பேருக்கு மாத்திரமே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டிருந்த விளக்கமறியல் கைதிகளாவர்.

வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட 5 அதிகாரிகள் உட்பட 139 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஏற்கனவே தொற்றுக்குள்ளானவர்களில் 129 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 4 ஆயிரத்து 228 பேர் குணமடைந்துள்ளனர். 8 பேர் மாத்திரமே கொரோனா தொற்றின் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சிறைச்சாலைகளில் 4 ஆயிரத்து 377 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

134 சிறைச்சாலை அதிகாரிகள், 487 ஆண் கைதிகள் , 11 பெண் கைதிகள் , 3 ஆயிரத்து 511 ஆண் விளக்கமறியல் கைதிகள், 234 பெண் விளக்கமறியல் கைதிகளுமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 886 பேரும், மெகசின் சிறைச்சாலையில் 868 பேரும் , மஹர சிறைச்சாலையில் 814 பேரும் , கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 434 பேரும் மற்றும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 363 பேருமே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## விடுமுறையில் வீடுதிரும்பிய பொலிஸ் விபத்தில் சாவு!

வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தமடு பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் அதிகாரியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவில் கடமையாற்றும் ஹேரத் (வயது 35) என்பவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இருந்து விடுமுறையில் தனது ஊரான குருணாகல் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் செல்லும்போது வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடவத்தமடு பகுதியில் டிப்பர் வாகனம் ஒன்றில் மோதியே பொலிஸ் அதிகாரி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொரோனாவுக்குள்ளான பவித்திரா பஸிலுடனான கூட்டத்தில் பங்கேற்பு!

கொழும்பு, ஜன.25

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

அமைச்சர் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள அதேவேளை, சுகாதார அமைச்சு வளாகம் மூடப்பட்டதுடன், பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சுடன் தொடர்புபட்ட பொது சுகாதாரப் பரிசோதகர்களிடம் கடந்த ஒரு வாரத்தில் அமைச்சர்களுடன் தொடர்பிலிருந்தவர்களின் பெயர்பட்டியல் வழங்கப்பட்டுள்ளன எனப் பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.



இந்த பட்டியலில் சுகாதார அமைச்சின் செயலாளர், பொதுசுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பல உயரதிகாரிகள் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று உறுதி செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற உயர்மட்ட சந்திப்புகளில் அமைச்சர் கலந்துகொண்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்துக்கும் அமைச்சர் சென்றுள்ளார். இங்கு கட்சியின் சிரேஷ்ட தலைவர் பஸில் ராஜபக்ஷ உட்பட முக்கிய தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் அமைச்சரும் கலந்துகொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகம் கடந்த சனிக்கிழமை மூடப்பட்டு கிருமிநீக்கப் பணிகள் இடம்பெற்றன.

இதேவேளை, தான் மேற்கொண்ட கொரோனா வைரஸ் சோதனையின்போது தான் பாதிக்கப்படவில்லை என்பது உறுதியான போதிலும் தான் சுயதனிமைப்படுத்தலை முன்னெடுத்துள்ளார் என பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir


# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நடுநிலையற்ற செயற்போக்கு

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் ஈடுபாடு காட்டும் சில அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் கொழும்பை மையப்படுத்தி இருக்கின்றன.

இன முரண்பாட்டை ஒட்டிய சிக்கல்களில் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவிப்பதன் மூலம் தம்மை அவை முன்னிலைப்படுத்திக் கொள்ளும். அது மட்டுமல்ல, இவ்விடயத்தில் அதிக ஈடுபாடு காட்டுபவை போல அவை தம்மை வெளிப்படுத்திக் கொள்ளும். தெற்கில் – கொழும்பில் – மையம் கொண்டு இயங்கும் இந்த அமைப்புகள் தமது செயற்பாடுகளுக்குப் பெரும் தொகை வெளிநாட்டு உதவிகளை பெற்றுக் கொள்ளுவதை இலக்காகக் கொண்டு செயற்படுபவை. இதற்காக இரட்டைத் தந்திரோபாய அணுகுமுறையை அவை எப்போதுமே வெளிப்படுத்தும்.

ஒருபுறம் – இனப் பிணக்கில் சம்பந்தப்பட்ட சிறுபான்மையினருக்காவும் தாம் குரல் கொடுப்பன போல அவை காட்டிக் கொள்ளும். அதுவும் தெற்கில் இருந்து கொண்டு வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்காக குரல் எழுப்புவதைபோல காட்டிக் கொள்ளவும் தவறமாட்டா. அதன் மூலம் தமக்கு நிதி உதவி வழங்கும் தரப்புகளுக்குத் தம்மை நடுநிலை செயற்பாட்டாளர்கள் போல வெளிப்படுத்தவும் அவை பின் நிற்கமாட்டா.

மறுபுறம் – அதேசமயம் தென்னிலங்கை ஆட்சிப் பீடத்துடனும் பகைத்துக் கொள்ளாத மாதிரியே தமது கருத்து நிலைப்பாட்டை அவை அம்பலப்படுத்தும்.

தங்கள் இருப்பைத் தக்க வைக்கவும், சர்வதேச உதவிகளைத் தொடர்ந்து இடையூறின்றிப் பெற்றுக் கொள்ளவுமே இத்தகைய இரட்டை நிலைப்பாட்டு உத்தியை – தந்திரோபாயத்தை – அவை கைக்கொள்கின்றன என்பதை அவற்றின் கடந்த காலத்தை உன்னிப்பாகக் கவனிக்கும் தரப்புகள் அறிந்து கொள்ள முடியும்.

அத்தகைய வகையறாவைச் சேர்ந்ததே பொதுசன செயற்பாட்டாளர் கலாநிதி ஜெஹான் பெரேராவை நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கொண்டு செயற்படும் தேசிய சமாதானப்பேரவையும் கூட.

இப்போதும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள கருத்து இதனை ஊர்ஜிதம் செய்யக் கூடியதுதான்.

*“ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான மற்றுமொரு புதிய பிரேரணை கொண்டு வருவது ஆராக்கியமான விடயமாக அமையும். ஆனால் தற்போதைய அரசியல் சூழலில் சர்வதேச தலையீட்டுடனான அல்லது பங்கேற்புடன் பொறுப்புக் கூறல் சாத்தியம் இல்லை. மாறாக, உள்ளக ரீதியான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கான சாத்தியமே காணப்படுகின்றது.”* – என்று அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா கூறுகின்றார்.

கோட்டாபய ராஜபக்ஷ அரசின் போக்கு, யதார்த்தக் களநிலைமை குறித்து பிரஸ்தாபிக்கும் இத்தரப்புகள் – குறிப்பாகத் தங்களை நடுநிலை செயற்பாட்டாளர்கள் போல காட்டிக் கொள்ளும் தரப்புகள் – எது நீதி, எது நியாயம் என்று உரைப்பதேயில்லை. நீதியை, நியாயத்தை உரைக்கப் போய் தென்னிலங்கை தங்களின் இருப்பை ஆபத்தில் சிக்க வைக்க அவை தயாரில்லை.

ஏதோ இலங்கை விவகாரம் – இன முரண்பாடு பற்றிய விடயம் – தங்களுக்கு அத்துப்படி என்பதைப் போல காட்டும் இந்த நிறுவனங்கள் நீதியை – நியாயத்தை – எடுத்துக் கூறும் விடயத்தில் எப்போதுமே ஒளித்துப் பிடித்துத்தான் விளையாடி வருகின்றன.

இனப் பிரச்சினையிலும், யுத்தப் பேரவலத்திலும் மோசமாகப் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நியாயம் கிட்டுவதற்கான – பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு நியாயம் கிட்டுவதற்கான – ஒரு வழிமுறையாக நிலைமாறு கால நீதியை சர்வதேசம் பரிந்துரை செய்து, பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு அதனைக் கிட்டச் செய்ய முயற்சித்து வருகின்றது. அந்த முயற்சியில் தாங்களும் பங்காளிகளை போலக் காட்டியே இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச நிதி உதவிகளை சூறையாடி வருகின்றன. அதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அந்த விடயத்தில் அவை உண்மையாக – நேர்மையாக – செயற்படுகின்றனவா என்பதுதான் கேள்வி.

பாதிக்கப்பட்ட தரப்பின் பரிதாப நிலைமை மீது சர்வதேச தரப்புகள் கொண்டிருக்கும் பரிவைத் தமது முதலாக்கிச் செயற்படும் இத்தகைய தொண்டு நிறுவனங்கள், கொஞ்சமேனும் நெஞ்சுக்கு நீதியாகச் செயற்பட வேண்டும்.

நிலைமாறுகால நீதி நான்கு அடிப்படை விடயங்களைக் கொண்டது. ஒன்று – உண்மையைக் கண்டறிதல்; இரண்டு – பொறுப்புக்கூறலை நிலைநாட்டுதல்; மூன்று – இழப்பீடுகளை வழங்குதல்; நான்கு – மீள நிகழாமையை உறுதிப்படுத்தல்.

இதிலே முதல் இரண்டும் முதலில் முக்கியமானவை. உண்மையைக் கண்டறிதலும், தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்திப் பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதுமாகும்.

இந்த இரண்டையும் செய்யவே முடியாது என்று பிடிவாதமாக நிற்கின்றது பௌத்த, சிங்கள பேரினவாத அரசு. இந்த இரண்டின் பேரிலும் கொடூரங்கள் அரங்கேறியமைக்கு பின்னணியில் இருந்து தூண்டி, அவற்றைக் கட்டவிழ்த்து விட்டதே அரசுதான். உண்மையைக் கண்டறிந்து பொறுப்புக் கூறலை நிலைநாட்ட முயன்றால் நாட்டின் தலைவரில் இருந்து பலர் நீதியின் முன் தலைகுனிந்து மண்டியிட வேண்டியவர்களாக இருப்பர்.

அதனால்தான் பொறுப்புக் கூறலை நிலைபாட்டுவதற்கு ஒத்துழைக்க மறுக்கின்றது பேரினவாத அரசு. அந்த உண்மையை அப்பட்டமாக சொல்வதற்குத் துணிவில்லாத ஜெஹான் பெரேரா போன்ற கற்றறிந்த தென்னிலங்கை செயற்பாட்டாளர்கள், சர்வதேசத் தலையீட்டுடனான பொறுப்புக் கூறல் பொறிமுறைக்கு சாத்தியமில்லை என்பதை யதார்த்தபூர்வமான நிலைப்பாடு என்று கூறுவதுடன் அடங்கி விடுவது நடுநிலையான – நியாயமான – போக்கு அல்ல.

# இலங்கையின் கொள்கை நிலைப்பாட்டுக்கு பொதுநலவாய நாடுகள் ஆதரவு வழங்கும்!

## தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் கொள்கைகள் மற்றும் நிலைப்பாடுகளுக்கு பொதுநலவாய நாடுகள் ஆதரவு வழங்கும் என்று எதிர்பார்ப்பதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்திருக்கிறார்.

இங்கிலாந்தின் தெற்காசிய மற்றும் மனித உரிமைகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் மற்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோருக்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை தொலைபேசி வழிக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது முக்கியமாகக் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்தன கடந்த சனிக்கிழமை தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உயர்நீதிமன்ற நீதிபதி நவாஸ் தலைமையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசேட ஆணைக்குழு தொடர்பில் தாரிக் அஹமட்டிடம் எடுத்துரைத்ததாக வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடல்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வதால் வெவ்வேறு நம்பிக்கைகளைக் கொண்ட குழுக்கள் மற்றும் நீதி ஆகியவற்றின் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது அமைச்சர் தினேஷ் குணவர்தனவிடம் எடுத்துக்கூறியதாக அமைச்சர் தாரிக் அஹமட் டுவிட்டரில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். செம்பியன்பற்றில் துப்பாக்கி முனையில் மிரட்டி இளம் பெண்ணின் கழுத்தை அறுத்துக் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்.செம்பியன்பற்று வடக்கு, முனைப் பகுதியில் துப்பாக்கி முனையில் மிரட்டி பெண்ணின் கழுத்தை அறுத்து கொள்ளையிட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது சு. டேனுஜா (வயது 21) என்ற குடும்பப் பெண் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு எட்டு பேர் கொண்ட கும்பலொன்று தம்மை பொலிஸார் எனக் கூறி, வீட்டுக்குள் புகுந்து துப்பாக்கி முனையில் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த குடும்ப பெண்ணை அச்சுறுத்தியமையுடன், கழுத்தையும் அறுத்துள்ளனர்.

இதன்போது வீட்டில் இருந்த 25 பவுண் நகை மற்றும் 83 ஆயிரம் ரூபா பணத்தையும் அவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 42 வயது மதிக்கத்தக்க நபரொருவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபரிடம் பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊஞ்சல் வலையில் சிக்குண்டு 8 வயது சிறுவன் பரிதாப சாவு!

## மட்டக்களப்பில் சோகம்

மட்டக்களப்பு – கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழடித்தீவு பகுதியில் எட்டு வயது சிறுவன் ஒருவர், ஊஞ்சல் சீலையில் சிக்குண்டு உயிரிழந்த சோக சம்பவம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றுள்ளது.

மகிழடித்தீவு – கட்டுப்பத்தை என்னும் பகுதியிலுள்ள மனோகரன் கேதீசன் என்னும் எட்டு வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பாடசாலை விடுமுறை நாளான நேற்று, வீட்டின் அருகிலுள்ள மாமரத்தில் தாயாரின் சாறியொன்றை ஊஞ்சல் அமைத்து விளையாடுவதற்கு முற்பட்ட வேளையில் சேலையில் சிக்குண்டு இவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவனின் தாயார், மாடுகளை மேய்ப்பதற்காக சென்றுவிட்டு வீட்டுக்கு வந்துள்ளார். அதனைத் தொடர்ந்து சிறுவனை தேடியபோது, சீலையில் சிக்குண்ட நிலையில் இருந்தவரை மீட்டு மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

எனினும் குறித்த சிறுவன் ஏற்கனவே உயிரிழந்திருந்தான் என வைத்தியசாலையின் கடமை வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார், சடலத்தைப் பார்வையிட்டதுடன் மரண விசாரணையைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைகளுக்கான உத்தரவை பிறப்பித்தார்.

சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கைதிக்குத் தொலைபேசி வழங்கிய சிறை அதிகாரி!

சிறைக்கைதிக்கு தொலைபேசி வழங்கியமை தொடர்பில் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் அதிகாரியொருவர் பணி இடை நிறுத்தப்பட்டுள்ளார் என சிறைச்சாலைகள் ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் கைதியொருவரிடமிருந்து மீட்கப்பட்ட தொலைபேசி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது கைதி தனக்கு சிறைச்சாலை அதிகாரியொருவரே தொலைபேசியை வழங்கினார் எனத் தெரிவித்துள்ளார். அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமறியல் சிறைச்சாலையின் ஆணையாளரின் ஆலோசனைக்கமைய விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கமைய சம்பந்தப்பட்ட அதிகாரி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த அதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

# இலங்கை மீது ஐ.நா. கிடுக்குப்பிடி; கசிந்தது ஆணையாளர் அறிக்கை!



ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வுக்கு முன்னதாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமிருந்து இலங்கை பற்றிய அறிக்கை கசிந்துள்ளது.

இலங்கை குறித்த விசாரணையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பரிந்துரைப்பதன் மூலம், உலகளாவிய அதிகார வரம்பின் கீழ் விசாரணைகள் மற்றும் வழக்குகளை நிறுவுதல் மற்றும் சர்வதேச குற்றங்களில் சிக்கியுள்ள இலங்கை அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்தல் என காட்டமான தீர்மானங்கள் மற்றும் முடிவுகளை உள்ளடக்கியதாக அறிக்கை காணப்படுகிறது.

அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:–

யுத்தம் முடிவடைந்து ஏறக்குறைய 12 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான உள்நாட்டு முயற்சிகள் பல முறை தீர்வுகளை வழங்கத் தவறிவிட்டன,

மேலும், நீதி வழங்கும் முயற்சிகள் கைவிடப்பட்டு, நாட்டில் உயரதிகாரிகள் கடந்த காலக் குற்றங்களை ஒப்புக்கொள்ள மறுத்து வருகின்றமையால், இலங்கை கடந்த காலத்தைப் பற்றி மறுக்கும் நிலையில் உள்ளது.

இது நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. பாதுகாப்புத் துறையில் எந்தவொரு விசாரணையையும் அல்லது விரிவான சீர்திருத்தங்களையும் செயற்படுத்தத் தவறியுள்ளது.

இந்த சூழலில், நிறைவேற்று அதிகாரத்தில் நீதித் துறை மற்றும் பிற முக்கிய நிறுவனங்களின் சுதந்திரம் மேலும் வலுவிழந்துள்ளது.

சிறுபான்மை சமூகங்களுடனான நல்லிணக்கம் மற்றும் மரியாதையை உறுதிப்படுத்தும் ஒரு முழுமையான தேசிய முயற்சியின் ஆரம்பம் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானம் 30/1இல் வாக்குறுதியளிக்கப்பட்ட 'மீண்டும் நிகழாமை' என்ற உத்தரவாதங்களை அடைவதற்குப் பதிலாக, இலங்கையின் தற்போதைய போக்கு கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மீண்டும் நிகழ்வதை எடுத்துக் காட்டுகின்றது.

இதேவேளை, கொவிட் – 19 தொற்றுநோயின் சவால்களை எதிர்கொள்வதை முழுமையாகப் பாராட்டும் அதேவேளையில், கடந்த ஆண்டு இடம்பெற்ற நடவடிக்கைகளில் உயர் ஸ்தானிகர் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளார்.

இது, மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமை மற்றும் எதிர்காலத்திலும் உரிமை மீறல்களுக்கான அபாயத்தின் தெளிவான ஆரம்ப எச்சரிக்கை அறிகுறிகளைக் குறிக்கிறது. எனவே, இதனைத் தடுக்கும் வலுவான நடவடிக்கைக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

2030 நிகழ்ச்சி நிரலுக்கு அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு இருந்தபோதிலும், தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினர் ஓரங்கட்டப்பட்டு, தேசிய பார்வை மற்றும் அரசாங்கக் கொள்கையிலிருந்து விலக்கப்படுகிறார்கள்.

அதேநேரத்தில், மிக உயர்ந்த மாநில அதிகாரிகளிடமிருந்து பிளவுபடுத்தும் மற்றும் பாகுபாடான சொல்லாட்சிகள் மேலும், பிரிவினை மற்றும் வன்முறையை உருவாக்கும் அபாயங்களை ஏற்படுத்துகின்றன.

2019 இல் ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து வந்த அவசரகால பாதுகாப்புப் பணிகள் அரசாங்கத்தின் இராணுவ மயமாக்கலாக வளர்ந்திருப்பதாக உயர் ஸ்தானிகர் கவலை கொண்டுள்ளார்.

பொதுமக்கள் நிர்வாகத்தின் முக்கிய பதவிகளுக்கு போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் என நம்பத்தகுந்தவர்கள் உட்பட செயலில் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களை அரசாங்கம் நியமித்துள்ளதுடன், பொதுமக்கள் செயற்பாடுகளை ஆக்கிரமிக்கும் இணையான பணிக்குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்களையும் உருவாக்கியுள்ளது.

20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நிர்வாகத்தின் முக்கியமான மாற்றங்கள் ஜனநாயக நடவடிக்கைகளை அச்சுறுத்துகிறது.

சமீபத்திய ஆண்டுகளில் விரிவடைந்த சுயாதீன ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்துக்கான இடம் குறுகிய காலத்திற்குள் முடங்கியுள்ளமை தொடர்பாக உயர் ஸ்தானிகர் கவலைப்படுகிறார்.

அத்துடன், அரச முகவர்களின் மிரட்டல் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள், வழக்கறிஞர்கள், ஊடகவியலாளர்கள், சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு எதிரான துன்புறுத்தல் உள்ளிட்ட அனைத்து வகையான நடவடிக்கைகள், கண்காணிப்புக்களையும் உடனடியாக முடிவுக்கு கொண்டுவருமாறு உயர் ஸ்தானிகர் அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறார். மேலும், முறையான சிவில் சமூக நடவடிக்கைகளை வலியுறுத்துகிறார்.

எனவே, மனித உரிமைகள் சபை இதற்கு முன்னர் இரண்டு முறை, உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுக்கு தனது ஆதரவை இலங்கைக்குக் கொடுத்துள்ளது, தீர்மானம் 30/1 இல் அதன் உச்சக்கட்டமாகப் பார்க்கப்படுகிறது.

சர்வதேச குற்றங்கள் மற்றும் கடுமையான மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறலுக்கான ஓர் அர்த்தமுள்ள பாதையைத் தொடர அரசாங்கம் இப்போது அதன் இயலாமை மற்றும் விருப்பமின்மையை நிரூபித்துள்ளது.

அதற்குப் பதிலாக அடிப்படையில் வேறுபட்ட அணுகுமுறையை அடையாளம் காட்டியது, இது இழப்பீடு மற்றும் வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது, ஆனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மை மற்றும் நீதி மற்றும் அவர்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

மூன்று முக்கியமான காரணங்களுக்காக மனித உரிமைகள் பேரவை இலங்கை மீது மேலும் நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமாகும்.

முதலாவதாக, கடந்த கால சூழலில் தப்பிப்பிழைத்த பல்லாயிரக்கணக்காணோரின் வாழ்க்கைத் துணைவர்கள், பெற்றோர்கள், பிள்ளைகள் மற்றும் பிற உறவினர்கள் தங்கள் அன்புக்குரியவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதும், நீதியை வழங்குவதும் அவசரகால இழப்பீடுமாகும்.

இரண்டாவதாக, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதில் தோல்வியானது, 2030 நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப நிலையான அமைதி, மனித மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மற்றும் எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் மற்றும் மோதல் போக்கின் தொடர்ச்சியான வடிவங்களைக் கொண்டுள்ளது.

இறுதியாக, இந்த அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் சபை உட்பட, அதன் செயற்பாடுகளின் அடிப்படையில் மீண்டும் ஒரு முக்கியமான சவாலாக உள்ளன.

இலங்கையில் 2009 இற்குப் பின்னரான ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக சுயாதீனமாக மதிப்பாய்வு செய்யப்பட்டது. மோதல் முடிவுக்கு வந்ததால் தடுப்பு நிகழ்ச்சி நிரலில் முறையான தோல்வி ஏற்பட்டது. சர்வதேச சமூகம் அந்தத் தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது, அல்லது பிற சூழல்களில் கடுமையான மீறல்களுக்கு பொறுப்புணர்வைத் தடுக்கவும் அடையவும் அதன் முயற்சிகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் ஒரு முன்னுதாரணத்தை அனுமதிக்கக்கூடாது.

2030 நிகழ்ச்சி நிரலுக்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை உயர் ஸ்தானிகர் வரவேற்கிறார், அமைதி கட்டமைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் போன்ற சில நடவடிக்கைகளைத் தொடர வேண்டும்.

ஆனால், இலங்கை நல்லிணக்கத்தை உறுதி செய்து, நிறுவனமயமாக்கப்பட்ட மற்றும் முறையான தண்டனையற்ற கலாசாரத்தை திறம்பட நிவர்த்தி செய்தால் மட்டுமே நிலையான வளர்ச்சி மற்றும் அமைதியை அடைய முடியும்.

எவ்வாறாயினும், தீர்மானம் 30/1 மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கான ஆதரவைத் திரும்பப் பெறுவதன் மூலமும், அந்தத் தீர்மானத்தின் முழு அளவிலும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதன் மூலமும், உள்நாட்டுப் பொறிமுறை மூலமாக உண்மையை வெளிக்கொணர்வதற்கான சாத்தியப்பாட்டை அரசாங்கம் பெருமளவில் மூடிவிட்டது.

அத்துடன், சமீபத்திய போக்குகளைப் பார்க்கும்போது, அரசாங்கத்தின் புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உட்பட இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையைக் கண்காணிப்பதை மேம்படுத்தவும், பொறுப்புக்கூறல் விடயங்களை முன்னேற்றுவதற்கான ஓர் ஒத்திசைவான மற்றும் பயனுள்ள திட்டத்தை வகுக்கவும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமைகள் பேரவையை உயர் ஸ்தானிகர் அழைக்கிறார்.

குற்றவியல் பொறுப்புணர்வை முன்னெடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை வழங்குவதற்கும் உறுப்பு நாடுகளுக்குப் பல கடமைகள் உள்ளன.

இலங்கையின் நிலைமையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பரிந்துரைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல், இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினரும் செய்த குற்றங்களை விசாரிப்பதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் உறுப்பு நாடுகள் தீவிர நடவடிக்கையைத் தொடரலாம்.

அல்லது, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் இணைந்து பொறுப்புக்கூறலுக்கான இத்தகைய வழிகளை ஊக்குவிக்க, சர்வதேச குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதன் மூலம், இந்த முயற்சிகளை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்புத் திறனை ஆதரிப்பதற்கும் ஊக்குவிக்கிறார்.

இலங்கை அரசாங்கத்துக்கு என உயர் ஸ்தானிகர் பின்வருவனவற்றைப் பரிந்துரைக்கிறார்.

அனைவருக்கும் பாகுபாடு காட்டாமை மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் அடிப்படையில், 2030 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, அனைவரையும் உள்ளடக்கிய, பன்மைத்துவ பார்வையை தீவிரமாக ஊக்குவித்தல்.

அரசமைப்பு மற்றும் சட்டத் சீர்திருத்தங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை வழிமுறைகள் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் ஆகியவற்றின் பரிந்துரைகளை ஏற்றிருப்பதை உறுதி செய்தல்.

சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன, அவை முறையாக விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்படும் என இராணுவம், உளவுத்துறை மற்றும் பொலிஸ் படைகளின் அனைத்து கிளைகளுக்கும் பகிரங்கமாக தெளிவான வழிமுறைகளை வழங்குதல்.

மனித உரிமை பாதுகாவலர்கள், சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான அனைத்து வகையான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல் மற்றும் பழிவாங்கல்களை உடனடியாக நிறுத்த அனைத்து பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் உத்தரவிடவும்.

மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்கள், சித்திரவதை மற்றும் மோசமான சிகிச்சை உள்ளிட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் உடனடியாகவும், முழுமையாகவும், பாரபட்சமின்றி விசாரிக்கவும், வழக்குத் தொடரவும், நீண்டகால ஆதார வழக்குகளில் பொறுப்புணர்வை உறுதி செய்வதற்கு அதிக முன்னுரிமை அளிக்கவும்.

மனித உரிமைத் தரங்களுக்கு இணங்க, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என நம்பப்படும் அலுவலக பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் பிற பொது அதிகாரிகளை நீக்குதல். பொறுப்புக்கூறல் மற்றும் பொதுமக்கள் மேற்பார்வை ஆகியவற்றை வலுப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் பாதுகாப்புத் துறையில் பிற சீர்திருத்தங்களைச் செயற்படுத்துதல்.

மனித உரிமைகள் ஆணையகம் சுயாதீனமாகச் செயற்படுவதற்கும் போதுமான ஆதாரங்களைப் பெறுவதற்கும் கட்டமைப்பு, பாதுகாப்புகளை உறுதி செய்தல்.

காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் திறம்பட மற்றும் சுயாதீனமாக செயற்படக்கூடிய சூழலை உறுதிசெய்க.

இரண்டு அலுவலகங்களுக்கும் அவற்றின் ஆணையை திறம்பட நிறைவேற்ற போதுமான ஆதாரங்கள் மற்றும் தொழில்நுட்ப வழிமுறைகளை வழங்குதல், பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான பாலின மையத்துடன் இடைக்கால நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், பயனுள்ள மற்றும் விரிவான இழப்பீடுகள் மற்றும் உண்மை மற்றும் நீதியை வழங்குதல்.

சர்வதேச சிறந்த நடைமுறைகளைக் கடைபிடிக்கும் சட்டம் மாற்றப்படும் வரை புதிய கைதுகளுக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவது குறித்த தடையை நிறுவுதல்.

ஜனாதிபதியால் மன்னிப்பு அல்லது பிற வகையான அனுமதியை வழங்குவதற்கான நிலையான நடைமுறைகளை நிறுவுதல். அதை நீதித்துறை மறு ஆய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் கடுமையான மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களை கவனத்தில் கொள்ளல்.

சம்பந்தப்பட்ட துறைசார் ஆணை வைத்திருப்பவர்களால் புதுப்பிக்கப்பட்ட நாட்டு வருகைகளைத் திட்டமிடுவதன் மூலம் சிறப்பு நடைமுறைகளுக்கான அதன் நிலையான அழைப்பை மதிக்கவும், ஒப்பந்த நடைமுறைகளுடன் தொடர்ந்து ஈடுபடுங்கள்! ஐ.நா. மனித உரிமை வழிமுறைகளின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் தொடர்ந்து தொழில்நுட்ப உதவியை நாடுங்கள்.

மனித உரிமைகள் பேரவை மற்றும் உறுப்பு நாடுகளுக்கு உயர் ஸ்தானிகர் பரிந்துரைக்கிறார்

(07 ஆம் பக்கம் பார்க்க....)

காலைக்கதிர்
Kalaikkathir

# ராஜபக்ஷக்களின் தான்தோன்றித்தன செயற்பாடு; 69 லட்சம் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள்!

## வெல்கம புலம்புகிறார்

நாட்டில் உள்ள தேசிய வளங்கள் ராஜ பக்ஷக்களின் குடும்ப சொத்தல்ல. தான் தோன்றித்தனமாக பிற நாட்டவர்களுக்கு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாக்கு வழங்க அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாட்டுக்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசியல் கட்சி பேதங்களைத் துறந்து எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

ராஜபக்ஷக்களால் 69 லட்சம் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் இராணுவ ஆட்சியிலான நிர்வாகம் செயற்படுத்தப்படும் என ஆரம்பத்தில் இருந்து குறிப்பிட்டேன்.



அரச நிர்வாகம் தொடர்பில் புலமையற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கி இன்று அரச சிவில் சேவைகள் அனைத்தும் இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளன. 69 லட்சம் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளார்கள்.

அரச சேவையிலும், உயர் அரச பதவிகளிலும் இராணுவத்தினர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சிவில் சேவைகள் தொடர்பாக புலமைபெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

இராணுவ ஆட்சியை கொண்டுள்ள நாடுகளிலும் ஆரம்பத்தில் இவ்வாறான தன்மையே காணப்பட்டது என்பதை நாட்டு மக்கள் தற்போதாவது புரிந்துகொள்ள வேண்டும்.

நாட்டில் உள்ள தேசிய வளங்கள் ராஜ பக்ஷக்களின் குடும்ப சொத்து அல்ல. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் அதானி நிறுவனத்தை அந்நாட்டு மக்கள் எதிர்க்கின்ற நிலையில் அரசாங்கம் அந்த நிறுவனத்துக்கு கிழக்கு முனையத்தை வழங்கத் தீர்மானித்துள்ளமை நகைப்புக்குரியது.

நல்லாட்சி அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு கொடுக்கும் போது முன்னின்று போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் இன்று இந்தியாவுக்கு அடிபணிந்து கிழக்கு முனையத்தை தாரைவார்க்க முயற்சிக்கிறார்கள்.

49 சதவீத உரிமம் இந்தியாவுக்கு வழங்கப்படும் என்று குறிப்பிடுவதை புத்திசாலியான மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தேசிய வளங்கள் ஒரு குடும்பத்தின் சொத்தல்ல. தான்தோன்றித்தனமாக செயற்பட்டு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசியல் கட்சி பேதங்களைத் துறந்து எதிர்க்க வேண்டும்.– என்றார்.

# அதிக வருமானத்தை பெற தேயிலைக்கு பதில் கஞ்சா!

## ஏற்றுமதி செய்க என அரசுக்கு சிங்களப் பத்திரிகை 'அட்வைஸ்'

இலங்கையின் தேயிலை தொழிற்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள பின்னணியில் உலகில் அதிக கேள்வி உள்ள கஞ்சா செய்கையை ஊக்குவித்து ஏற்றுமதி செய்வதனூடாக பெருமளவு வருமானத்தை ஈட்டமுடியும்.

இவ்வாறு பிரபல சிங்களப் பத்திரிகையொன்று அரசாங்கத்துக்கு 'அட்வைஸ்' செய்துள்ளது.

'தேயிலைக்கு பதிலாக கஞ்சா வளர்ப்போம்' என்ற தலைப்பில் இன்று இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கஞ்சா இலங்கையில் இன்றும் தடை செய்யப்பட்ட செய்கையாகக் காணப்படுகின்றது.

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் கஞ்சா செய்கைக்கு அனுமதி வழங்கியுள்ள நிலையில், இலங்கையிலும் கஞ்சா செய்கை தொடர்பில் புதிய கருத்து பகிர்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் கஞ்சா தொடர்பில் வெள்ளையர்களால் வகுக்கப்பட்ட 85 வருடங்கள் பழைமையான சட்டமே இன்றும் காணப்படுகிறது.

1935 ஆம் ஆண்டு சட்டத்தின் பிரகாரம், கஞ்சா செய்கை செய்தல், தன்வசம் வைத்திருத்தல், விற்பனைசெய்தல் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது.

1961 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, கஞ்சாவை, போதைப்பொருள் மற்றும் நஞ்சுத் தன்மை வாய்ந்த ஔடதங்கள் பட்டியலுக்குள் சேர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பட்டியலில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

எனினும், 2019 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை, கஞ்சாவை அந்தப் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கஞ்சா செய்கை தொடர்பாக அகில இலங்கை உள்நாட்டு மருத்துவ சங்கத்தின் ஆலோசகரும், ஆயுர்வேத சபையின் முன்னாள் ஆவண காப்பாளருமான விசேட ஆயுர்வேத வைத்தியர் டெனிஸ்டன் பெரேரா கருத்து வெளியிடுகையில்-

'உண்மையில் கஞ்சாபூ மற்றும் கஞ்சாபகையை மாத்திரமே போதைப்பொருளுக்காகப் பயன்படுத்துகின்றனர். கஞ்சா விதைகள் மற்றும் கஞ்சா பட்டைகள் மருத்துவ குணம் மற்றும் உணவுக்கான தன்மை கொண்டவை. அதற்கும் மேலதிகமாக பொருளாதார ரீதியிலான செய்கையாக முன்னெடுக்கலாம். அதனூடாக எண்ணிப் பார்க்க முடியாதளவு பயன்பாட்டை பெற முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகள், அரசாங்கத்தின் அனுசரணையுடன் இதனை வணிக செய்கையாக முன்னெடுக்கின்றன' என கூறியுள்ளார்.

இலங்கையில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மாத்திரம், மருத்துவத்துக்காக கஞ்சா வளர்ப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், ஜமேக்கா உள்ளிட்ட இலத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளின் பிரதான வருமான மார்க்கமாக கஞ்சா செய்கை காணப்படுகின்றது என அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தேசப்பற்றாளர்கள் ஆளும் கட்சியாக வந்ததும் தேசத் துரோகிகளாக தம்மை மாற்றுகிறார்கள்!

## விஜயதாஸ ராஜபக்ஷ வேதனை

எதிர்க்கட்சியில் இருக்கும் போது தேசப்பற்றுள்ளவர்களாக செயற்படும் அரசியல்வாதிகள் ஆளும் கட்சிக்கு வந்த பிறகு தேசப்பற்றை மறந்து விடுகிறார்கள். அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவிற்கு வழங்கியதால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவேண்டும் என்ற கட்டாயம் ஏதும் கிடையாது. இந்த விடயத்தில் அரசாங்கம் சுயாதீனமாக செயற்படலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு வழங்கும் போது அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் பல எதிர்ப்புக்கள் காணப்பட்டன. அப்போது ஆளும் தரப்பில் இருந்த தற்போதைய எதிர்க்கட்சியினர் இன்று வெளிப்படுத்தும் தேசிய பற்றை வெளிப்படுத்தவில்லை. அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை செயற்படுத்தவே ஆதரவு வழங்கினார்கள்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கினால்



எதிர்காலத்தில் ஏற்படும் விளைவுகளை பகிரங்கப்படுத்தினேன். நல்லாட்சி அரசாங்கத்தில் முரண்பாட்டுக் கொள்வதற்கு இதுவும் ஒரு காரணியாக அமைந்தது. தேசிய வளங்கள் தொடர்பாக எதிர்க்கட்சியினரின் நிலைப்பாடு ஆளும் கட்சிக்கு வந்த பிறகு மறக்கப்படுகிறது. தற்போது இந்தத் தன்மையே நிலவுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு வழங்கியுள்ளதால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்க வேண்டிய கட்டாயம் காணப்படுகிறது என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த விடயத்தில் அரசாங்கம் சுயாதீனமாக தீர்மானம் எடுக்கலாம். பின்வாங்குவதற்கான எவ்வித நிபந்தனையும் இந்த விடயத்தில் கிடையாது. – என்றார்.

# மின்கம்பத்துடன் கனரக வாகனம் மோதி வவுனியாவில் விபத்து!

வவுனியா, புளியங்குளம் பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை கனரக வாகனமொன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தையடுத்து மின் கம்பம் பலத்த சேதமடைந்துள்ளமையுடன், சாரதி எவ்வித காயங்களுமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்.

பொலன்னறுவையில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்ற கனரகவாகனம் புளியங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த உயர் அழுத்த மின் கம்பத்துடன் மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் கனரக வாகனமும், மின் கம்பமும் சேதமடைந்ததுடன், விரைந்து செயற்பட்ட மின்சார சபையினர் அந்தப் பகுதிக்கான மின் விநியோக நடவடிக்கையை விரைந்து துண்டித்தமையால் அனர்த்தங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசிய மட்ட வேலைத்திட்டம் இல்லாமல் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது!

## விசேட வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டு

கொவிட்டை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும் தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கத் தவறி இருக்கின்றது. அத்துடன் இதனை கட்டுப்படுத்த விஞ்ஞான ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கற்பனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் தான் கொரோனா பரவும் வேகம் அதிகரித்துள்ளது என இலங்கை கம்யூனிஸ் கட்சியின் செயலாளரும் வைரஸ் தொடர்பான விசேட வைத்திய நிபுணருமான ஜீ. வீரசிங்க தெரிவித்தார்.

கொவிட்டை கட்டுப்படுத்த தேசிய மட்டத்திலான வேலைத்திட்டத்தின் தேவை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. என்றாலும் அந்த நடவடிக்கை தேசிய மட்டத்திலான நடவடிக்கையாகக் காண்பதற்கு இல்லை. தேசிய மட்டத்திலான வேலைத்திட்டம் ஒன்று இருந்தால்தான் அனைவரதும் ஒத்துழைப்பை இதற்கு பெற்றுக் கொள்ளலாம். குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளை இதற்காக இணைத்துக்கொண்டிருக்கவேண்டும். அவ்வாறு இடம்பெற்றிருப்பதை காணமுடியாமல் இருக்கின்றது.

அதேபோன்று அனைத்து சமூகத்தவர்களையும் இந்த வேலைத்திட்டத்துக்கு இணைத்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாமல் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாமல்போகும்.

அத்துடன் பிரசாரப்படுத்திய பாணியை பயன்படுத்தியவர்களும் கொவிட் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர். கற்பனைக்கு முக்கியத்துவம் கொடுத்ததால்தால் எமது நாடு பேரழிவுக்கு இட்டுச்செல்லப்பட்டிருக்கின்றது.

மேலும், கொவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்வதால், அந்த சடலங்களின் பாகங்கள் நீருடன் கலந்து, அந்த நீரை யாராவது பயன்படுத்தினால் கொரோனா தொற்று ஏற்படும் என்பது கற்பனையான நிலைப்பாடாகும். அவ்வாறு ஒருபோதும் ஏற்படுவதில்லை. விஞ்ஞான ஆய்வு ரீதியில் அது பிழையான கருத்தாகும். இந்த பிரச்சினையால் நாட்டில் மிகவும் உணர்வு ரீதியான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அடக்கம் செய்ய அனுமதிக்காததால் நாட்டில் ஒரு சமூகம் இதனால் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

அதனால் முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரமல்ல கொவிட்டில் மரணிப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய விரும்பும் யாருக்கு வேண்டுமானாலும், அதற்கான அனுமதியை வழங்கி, அதுதொடர்பான தேவையான சுகாதார வழிகாட்டல்களைத் தயாரிக்கவேண்டியது சுகாதார அமைச்சின் பொறுப்பாகும். – என்றார்.

# 30 வருடம் வடக்கு, கிழக்கு இளைஞர் கட்டுப்பாட்டில் இருந்தமையால் நிலங்களை அபகரிக்க முடியவில்லை!

## 2009 இற்குப் பின் எதிர்ப்பின்றி அபகரிப்பு என விக்கி கவலை



**30** வருடங்களாக யுத்தம் நடைபெற்றபோது வட மாகாணத்தின் ஏறத்தாழ முழுமையான பகுதியும் கிழக்கு மாகாணத்தின் பெரும்பான்மையான பகுதிகளும் எமது இளைஞர்களின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் அம்பாறை, திருகோணமலையில் நடந்தமை போல பெருமளவில் எமது நிலங்களை அரசாங்கங்களால் அபகரிக்க முடியவில்லை. ஆனால், 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர், வடக்கு கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் எந்தவித எதிர்ப்பும் இன்றி எமது நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

– இவ்வாறு வேதனையுடன் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வீ.விக்னேஸ்வரன்.

காணி அபகரிப்பு தொடர்பான கருத்துப் பரிமாற்றம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

எமக்கு எதிராக சிங்கள அரசாங்கங்கள் மேற்கொண்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் ஒரு முக்கிய நடவடிக்கையாக நில அபகரிப்பு காணப்படுகின்றது. இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல், எமது நிலங்களை அபகரிப்பதற்கு பல்வேறு உபாயங்களை அரசாங்கங்கள் கையாண்டுவருகின்றன. நீர்ப்பாசன அபிவிருத்தி என்ற போர்வையில் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் ஊடாக பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக்களில் கிழக்கு மாகாணத்தில் சிங்களக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இனப்பரம்பலில் செயற்கையான மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில், குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் வன்முறைகளின் ஊடாகத் தமிழ் கிராமங்கள் பலவற்றில் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டு அவை முற்றாக சிங்கள மற்றும் முஸ்லிம் கிராமங்களாக இன்று மாற்றப்பட்டுவிட்டன.

ஒருபுறம் நீர்ப்பாசன திட்டங்கள் என்ற போர்வையில் நிலங்கள் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பறிக்கப்படுகின்றன. மறுபுறம், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை இராணுவம் தன் வசம் வைத்துள்ளது. இதில், இராணுவ முகாம்கள் மட்டுமல்ல இராணுவ குடியிருப்புக்களும் உள்ளடங்கும். இவை தவிர, அரசாங்கம் எமது நிலங்களை அபகரிக்கும் நடவடிக்கைகளில் அரச இயந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்திவருகின்றது. வன திணைக்களம், வன விலங்குகள் திணைக்களம், தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், மகாவாலி அதிகாரசபை ஆகியவை இவற்றுள் உள்ளடங்கும்.

எவ்வளவு வேகமாக நாம் எமது நிலங்களை இழந்துகொண்டிருக்கின்றோம் என்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தை ஓர் உதாரணமாக சொல்கின்றேன். எமது மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ரவிகரனின் புள்ளி விவரங்களின் படி முல்லைத்தீவின் மொத்த நிலப்பரப்பு 6 லட்சத்து 21 ஆயிரத்து 917. இதில், 4 லட்சத்து 20 ஆயிரத்து 300 ஏக்கர் அடர்ந்த காடு. ஆகவே, மக்கள் பயன்பாட்டுக்கு இருக்கும் நிலப்பரப்பு 2 லட்சத்து 1,617 ஏக்கர் ஆகும். இதில், ஆகக்குறைந்தது 80 ஆயிரம் ஏக்கர் நிலம் இராணுவம் மற்றும் அரச திணைக்களங்களின் கீழ் பறிக்கப்பட்டுள்ளது. இந்த புள்ளிவிவரத்தின்படி, முல்லைத்தீவு மாவட்டத்தின் மக்கள் பயன்பாட்டுக்குரிய நிலப்பரப்பில் ஏறத்தாழ 40 வீத நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது. இந்த சிறிய உதாரணம் எம்மை சூழ்ந்துவரும் ஆபத்தை வெளிப்படுத்துகின்றது.

ஆனால், கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரான கடந்த 10 வருட காலப்பகுதியில், நில அபகரிப்புக்கு எதிராக நாம் உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் காத்திரமான எதிர்ப்பு நடவடிக்கைகளையும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்பதே உண்மையானது. உள்நாட்டு சட்ட ரீதியாக மேற்கொள்ளக்கூடிய விடயங்களை நாம் முழுமையான அளவில் மேற்கொள்ளவில்லை. அதேபோல, சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமை கட்டமைப்புக்கள், ஒப்பந்தங்கள், கோட்பாடுகள், போன்வற்றையும் நாம் முழுமையான அளவில் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இவற்றுக்கு மேலதிகமாக, சர்வதேச ஊடகங்களின் ஊடாக எமக்கு எதிரான நில அபகரிப்பை நாம் வெளிப்படுத்த வேண்டும். ஐ. நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள், வெளிநாட்டு அரசாங்கங்கள், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், தூதரகங்கள் போன்றவற்றின் கவனத்தை ஈர்க்கும் வகையில் திட்டமிடப்பட்ட சிறப்பான lobbying ஆதரவு நாடி செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கவேண்டும்.

ஆனால், இவற்றையெல்லாம், நாம் மேற்கொள்வதற்கு எமக்கு எதிரான நில அபகரிப்புக்கள் தொடர்பில் நம்பகத்தன்மையான நவீன தொழில்நுட்ப முறைகளில் அமைந்த ஆவணப்படுத்தல் பொறிமுறையும் ஆய்வும் அவசியம். சர்வதேச தராதரங்களுக்கு அமைவான ஆவணப்படுத்தல் மற்றும் ஆய்வு செயற்பாடுகளை நாம் முன்னெடுப்பது எமக்கு எதிரான நில அபகரிப்பு பற்றி சர்வதேச அளவில் நம்பகத்தன்மையானமுறையில் ஒரு விழிப்புணர்வையும் கவனத்தையும் ஏற்படுத்துவதற்கு உதவும். மறுபுறத்தில், அரசியல் ரீதியாக சர்வதேச அளவில் நாம் lobbying ஆதரவு நாடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மட்டுமன்றி உள்ளூரில் சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இது பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

ஆகவே, நில அபகரிப்புக்கு எதிரான எமது செயற்பாடுகளை நாம் வெறுமனே ஆர்ப்பாட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகளுடன் மட்டும் நிறுத்திவிடாமல் மேற்குறிப்பிட்ட அறிவு, தகவல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் அடிப்படையிலான நடவடிக்கைளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

உதாரணமாக, பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் நில அபகரிப்பு பற்றி சர்வதேச ரீதியான விழிப்புணர்வு இருக்கிறது. இதற்குக் காரணம், அவை பற்றிய முறையான ஆவணப்படுத்தல், ஆய்வுகள், பரப்புரைகள், ஊடக வெளியீடுகள் நடைபெற்றிருப்பதுதான்.

எமக்கு எதிராக என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி எமக்கே சரியான புரிதல்கள் இன்றி இருக்கும் ஒரு துரதிஷ்டமான நிலைமையே காணப்படுகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெறும் நில அபகரிப்பு பற்றி ஆராய்வு செய்த யூத பேராசிரியரான Oren Yiftachel என்பவர் அவற்றை ethnocratic land practices என்று குறிப்பிடுகிறார். ஏனென்றால், ஜனநாயகம், சட்டம் ஆகியவற்றின் போர்வையில், ஒரு நாட்டில் தனி ஒரு இனத்தின் மேலாண்மையை நிலைநிறுத்தும் வகையில் ஓர் அரசு தனது நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் அதனை ethnocratic regime என்று அவர் கூறுகிறார். இஸ்ரேலைபோல ஒரு ethnocratic நாடக இருப்பதற்கான அத்தனை பண்புகளும் இலங்கைக்கு இருப்பதாக அவர் கூறுகிறார். இதுபோன்ற விடயங்களை மேலும் ஆய்வு செய்து, அல்லது இந்த வாதத்தினை பலப்படுத்தும் நோக்கில் ஆதாரங்களை சேமித்து ஆவணப்படுத்தி எவ்வாறு எமக்கு எதிராக நில ஆக்கிரமிப்புக்கு நீதியை பெறுவதற்கு நம்பகத்தன்மையான ஆதிக்கம் நிறைந்த கருத்து வினைப்பாட்டை நாம் மேற்கொள்ளலாம் என்று சிந்தித்து விஞ்ஞான ரீதியாக நாம் செயற்படவேண்டும். – என்று தெரிவித்தார்.



இலிசியம் முன்பள்ளியின் வருடாந்த மாணவர் கௌரவிப்பு விழா திவ்ய மஹால் மண்டபத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இலிசியம் முன்பள்ளியின் நிர்வாக இயக்குனர் திரு. நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வை.விஜயபாஸ்கர் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந் நிகழ்வில் சிறுவர் நிகழ்ச்சிகள், மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் ஆசிரியர் கௌரவிப்பு போன்றன இடம்பெற்றதுடன் பிரதம விருந்தினருக்கு நினைவுப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## இலங்கை மீது....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான முன்னேற்றம் உட்பட இலங்கையில் மனித உரிமைகள் நிலைமையைக் கண்காணிப்பதை மேம்படுத்த OHCHR ஐக் கோருங்கள், மேலும், மனித உரிமைகள் பேரவையில் தொடர்ந்து அறிக்கை செய்யுங்கள்.

எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கான ஆதாரங்களைச் சேகரித்துப் பாதுகாப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைப்பவர்களுக்காக வாதிடுவதற்கும், உறுதியான அதிகார வரம்பைக் கொண்ட உறுப்பு நாடுகளில் தொடர்புடைய நீதித்துறை நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கும் ஒரு பிரத்தியேக ஆதரவை வழங்க வேண்டும்.

உலகளாவிய அதிகார வரம்பு உள்ளிட்ட உள்நாட்டு அதிகார வரம்புகளில் உள்ள நீதித்துறை நடவடிக்கைகள் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து தரப்பினரும் செய்த சர்வதேச குற்றங்களை விசாரிக்கவும், வழக்குத் தொடரவும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளுடன் ஒத்துழைக்கவும்.

கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு நம்பகமானதாகக் கூறப்படும் குற்றவாளிகளுக்கு எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் போன்ற சாத்தியமான இலக்குத் தடைகளை ஆராயுங்கள்!

இலங்கை காவல்துறை மற்றும் இராணுவ பரிமாற்றங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்காக அடையாளம் காணப்பட்ட இராணுவ வீரர்களுக்கு கடுமையான சோதனை முறைகளைப் பயன்படுத்துங்கள்!

சிவில் சமூக முன்முயற்சிகள் மற்றும் இழப்பீடு மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உதவிக்கான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அவர்களின் இருதரப்பு மனிதாபிமான, மேம்பாடு மற்றும் உதவித்தொகை திட்டங்களுக்கு உதவ முன்னுரிமை அளித்தல்.

பழிவாங்கல்களை எதிர்கொள்பவர்களைப் பாதுகாப்பதற்காக இலங்கை நாட்டினருக்கான புகலிடம் நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்யுங்கள்! மற்றும் சித்திரவதை அல்லது பிற கடுமையான மனித உரிமை மீறல்களின் உண்மையான அபாயத்தை முன்வைக்கும் வழக்குகளில் எவ்விதமான மறுசீரமைப்பையும் தவிர்க்கவும்!

ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுக்கு பின்வரும் விடயங்களை உயர் ஸ்தானிகர் பரிந்துரைக்கிறார்.

மனித உரிமைகள் தொடர்பான செயலாளர் நாயகத்தின் அழைப்பு இலங்கையில் உள்ள அனைத்து ஐக்கிய நாடுகளின் கொள்கை மற்றும் திட்டவட்டமான ஈடுபாட்டை வழிநடத்துகிறது என்பதை உறுதிப்படுத்தவும். 2030 நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப, அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் உள்ளடக்கம், பாகுபாடு காட்டா மற்றும் பயனுள்ள, பொறுப்புணர்வு மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நிறுவனங்களுக்கான ஆதரவு ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும்.

பாதுகாப்பு அமைச்சகம் அல்லது அனைத்து அமைப்புகளுடனும் பாதுகாப்பு அமைச்சகம் அல்லது அமைச்சின் பொதுப் பாதுகாப்பு ஆகியவற்றின் கீழ் ஈடுபடுவதில் கடுமையான மனித உரிமைகள் காரணமாக விடாமுயற்சியுடன் இணைத்தல்

ஐ.நா. அமைதி காக்கும் படை உருவாக்கத்தின் சவால்களை முழுமையாகப் புரிந்துகொண்டாலும், ஐ.நா. அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இலங்கையின் பங்களிப்புகளை மதிப்பாய்வு செய்யுங்கள்.

- நன்றி' சண்டே ரைம்ஸ்
- தமிழில் சுரேந்திரன் லிதர்சன்

காலைக்கதிர் Kalaikkathir

ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



# மெய்நிகர் வகுப்பறை

04

## Online Classroom

கொவிட் - 19 வைரஸ் தொற்று அதன் பின்னரான உலகளவிலான முடக்க நிலை கல்வித்துறையில் மெய்நிகர் வகுப்பறை என்ற நுட்பியல் வெளியைத் திறந்துள்ளது என்று நம்புகின்றோம். உண்மையில் இந்த எண்ணம் திடீரென பிறந்ததல்ல, மெய்நிகர் வகுப்பறை ஏற்கனவே இருந்த இணையவழி வசதிகளில் இருந்து தான் உருவாகிறது. வணிகத்தேவைக்காக உருவாக்கப்பட்ட பல மென்பொருள்கள் ஏற்கனவே இணையத்தில் உலாவி வந்திருக்கின்றன. குறிப்பாக உலகளவில் வெவ்வேறு கண்டங்களில் தமது பாரிய நிறுவனங்களைக் கொண்டுள்ள பல்தேசியக் கம்பனிகள் தங்கள் வேலைப்படையை ,ஆளணியை இலகுவாக அணுகுவதற்காக பல மென்பொருள்களை ஏற்கனவே பயன்படுத்தி வந்தன. இதற்காக, நேரடியாக முகம் பார்த்து உரையாடும் வசதிகளை பல மென்பொருள் நிறுவனங்கள் வணிக நடவடிக்கைக்காகத் தயாரித்து இணையத்தில் உலாவவிட்டிருந்தன. இது பணச் செலவு குறைந்த தொலைதூர வேலைப்படையை தொடர்பு கொள்ளும் வழியாக நோக்கப்பட்டது. இவ்வாறு வணிக நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட இந்த மென்பொருள்கள் மெல்ல மெல்ல கல்வித்துறைக்கும் அறிமுகமாகிவந்திருக்கின்றன. இந்தப் போக்கை 2010 ஆண்டுக்குப் பின்னர் அவதானிக்கலாம்.

கோவிட் 19 நோய் தொற்றினால் பொது முடக்கம் உலகளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட போது கல்வி நிறுவனங்கள் இந்த நுட்பியல் வெளிக்குள் தவிர்க்க முடியாமல் உள்நுழைந்தன. அப்போது, உலகளவில் இந்தவகையான மென்பொருள்களைப் பயன்படுத்தும் பயனர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்தது. அதில் சில செயலிகள் கண்டங்கள் சார்ந்து பிரபல்யமாகியுள்ளன.

உதாரணமாக இந்தியா, இலங்கை போன்ற நாடு



களில் கல்வித்துறையில் ஜூம் செயலி வேகமாக அறிமுகமாகி முன்னணி வகிக்கின்றது. ஆனால் தற்போது வெவ்வேறு செயலிகள் அதிகளவு பயனர்களுடன் உலாவிவருகின்றன. இப்போ பல மென்பொருள்களும் தொலைநிலை கற்பித்தலில் செல்வாக்கு செலுத்தத் தொடங்கியுள்ளன. இவை மெய்நிகர் கற்றலுடன் ஒட்டிக்கொண்டிருப்பதால், எதிர்காலத்தில் கற்றலில் மற்றும் கற்பித்தலில் வலுவான வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது.

ஒன்லைன் கற்பித்தல் மற்றும் தொலைநிலை கற்றலுக்கு வசதியான பல மென்பொருள்கள் இணையத்தில் காணப்படுகின்றன. அவற்றில் முதன்மையான 20 மென்பொருள்களை இங்கு நிரல்படுத்த முற்படுகிறேன். அவை பற்றி இனிவரும் தொடர்களில் விரிவாகப் பார்க்கலாம்.

### 1. Google Meet

கூகிளின் மீட் கருவி ஜிமெயிலுடன் ஒருங்கிணைக்கிறது. இலவசமாக கிடைக்கிறது.

### 2. Microsoft Team

மைக்ரோசாஃப்ட் ரீம் ஒரு 'கற்பித்தல் தளம்' (இது ஆசிரியர்களுக்காக வெளிப்படையாக வடிவமைக்கப்படவில்லை என்றாலும்). இது தொலைதூர போதனையை தொகுக்க பயன்படுத்தக்கூடிய ஒரு வகையான தகவல் தொடர்பு மற்றும் வள மையமாகும் - தொடர்புகொள்வதற்கும், திட்டமிடுவதற்கும், பகிர்வதற்கும், ஆவணப்படுத்துவதற்கும் மைக்ரோசொஃப்ட் ரீம் பயன்படுத்துவதால் குறைவான அம்சங்களைக் கொண்டிருக்கும் ஜூம் குக்கு மாற்றாகப் பயன்படுத்துவதைக் கருத்தில் கொள்ளலாம்.

### 3. BlueJeans

ப்ளுஜீன்ஸ், வீடியோ மற்றும் தொலை சந்திப்பு தளம் சந்திப்பு காலெண்டர்கள், உலாவி செயல்பாடு, சைட் காட் மற்றும் ஸ்கிரீன் ரேக்காடிங் ஆகியவற்றுடன் எளிய மற்றும் பாதுகாப்பான வீடியோ சந்திப்பை வழங்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 4. BigBlueButton

பிக் ப்ளூபட்டன், லைவ் வைட்போர்டுகள், விளக்கக்காட்சி கருவி, அரட்டை, உள்ளமைக்கப்பட்ட வாக்குப்பதிவு, பதிவு மேலாண்மை போன்ற பிற அம்சங்கள் காணப்படுகின்றன.

### 5. Google Hangouts

கூகிள் ஹேங்கவுட்கள் ஒருவருக்கொருவர் அழைப்புகள், குழு அழைப்புகள், செய்தி அனுப்புதல், ஸ்கிரீன் பகிர்வு மற்றும் ஜி சூட் உடன் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வழங்குகின்றன.

### 6. AnyMeeting

எளிய, குறைந்த அளவிலான மெய்நிகர் சந்திப்பு தளம்

### 7. Webex

வெபெக்ஸ் என்பது ஒரு நிலையான வணிக தளமாகும், இது வீடியோ சந்திப்பு முதல் பெரிய, ஆன்லைன் நிகழ்வுகள் மற்றும் குழு ஒயிட் போர்டிங் வரை ஆன்லைன் சந்திப்புகளுக்கான வீடியோ ஸ்ட்ரீமிங்கிற்கான பல பாரம்பரிய அம்சங்களை வழங்குகிறது. இது மாணவர்களின் தொடர்புகளுக்கு ஆசிரியரைக் காட்டிலும் பள்ளித் துறை அல்லது மாவட்ட நிகழ்வுக்கு சிறந்த பொருத்தமாக இருக்கலாம்.

### 8. GoToMeeting

மெய்நிகர் சந்திப்புகளுக்கான நீண்டகால வணிக பிரதானமான GoToMeeting திரை பகிர்வு, மாநாட்டு அழைப்பு, வீடியோ கான்பரன்சிங் மற்றும் மொபைல் பயன்பாடு ஆகியவற்றை வழங்குகிறது. ஆவணங்கள் தேவைப்படும் பள்ளி கூட்டங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும.

### 10. Skype

ஸ்கைப், இணைய உலாவிகள் மூலம் மொபைல் பயன்பாடு வழியாக பயன்படுத்தக்கூடிய மைக்ரோசாப்டின் வீடியோ அழைப்பு தளம். இது ஸ்ட்ரீம் ரெக்கார்டிங், நேரடி வசன வரிகள் மற்றும் தொலைபேசி அழைப்புகளுக்கும் பயன்படுத்தப்படலாம்.

### 11. YouTube Streaming

ஓர் ஆசிரியருக்கு வகுப்பறையை நடத்துவதற்கான வழியைக்காட்டிலும், நிலையான கல்வி சார்ந்த உள்ளடக்கத்தை வழங்கும் தனிப்பட்ட 'கற்றல் சேனல்களுக்கு' YouTube ஸ்ட்ரீமிங் சிறந்தது.

### 12. Whereby

திரை பதிவு, அரட்டை, ஸ்கிரீன் பகிர்வு மற்றும் பலவற்றைக் கொண்ட உலாவி அடிப்படையிலான வீடியோ அழைப்பு.

### 13. Yotribe(Wonder)

யோட்ரிப், சிறிய குழுக்களுடன் ஈடுபடுவதற்காக வடிவமைக்கப்பட்ட உலாவி அடிப்படையிலான வீடியோ கான்ஃபரன்சிங் கருவி.

### 14. Discord

வீடியோ கேம்களை விளையாடும் மற்றும் ஸ்ட்ரீம் செய்யும் நபர்களுக்காக முதலில் உருவாக்கப்பட்ட ஒரு திறந்த மூல (அழைப்பிற்கு மட்டும்) தளம்.

### 15.Miro

மிரோ, ஆன்லைன், கூட்டு ஒயிட் போர்டு தளம்.

### 16. Twitch

ட்விச் என்பது விளையாட்டாளர்களுக்கான (வீடியோ கேம்களை விளையாடும் நபர்கள்) (மிகவும் பிரபலமான) வீடியோ ஸ்ட்ரீமிங் கருவியாகும். இது, ஆசிரியர்களுக்காக வெளிப்படையாக வடிவமைக்கப்பட்ட ஒரு கருவி அல்ல, முறைசாரா கற்றல் சூழல்கள், பல்கலைக்கழக அமைப்புகள் மற்றும் விளையாட்டு அடிப்படையிலான கற்றல் பயன்பாடுகளில் இது பயனுள்ளதாக இருக்கும்.

### 17. Vimeo

விமியோ, தனியுரிமை கட்டுப்பாடுகள், தனியார் குழு திட்டங்கள் மற்றும் வீடியோ உருவாக்கும் கருவிகளை மையமாகக் கொண்ட வீடியோ ஹோஸ்டிங் வழங்குகிறது.

### 18. Facebook Live

பேஸ்புக்லைவ் ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகளைக் காட்டிலும் குடும்ப உறுப்பினர்கள், நிதி திரட்டல் மற்றும் 'செல்வாக்கு செலுத்துபவர்களுக்கு' அதிகம் பயனுள்ளது. பேஸ்புக் லைவ் ஏற்கனவே பேஸ்புக் குழுக்களைப் பயன்படுத்தும் ஒரு பாரம்பரிய மற்ற வகுப்பறைக்கு ஒரு விருப்பமாக இருககிறது.



### 19. Loom

ஒரு நேரடி ஸ்ட்ரீமிங் தீர்வு அல்ல, ஆனால் பதிவுசெய்து பகிர எளிதானது - வீடியோ பாடங்களுக்கு சிறந்தது.

### 20. Hopin

ஹோபின் ஒன்லைன் பட்டறைகள் மற்றும் மாநாடுகள் மற்றும் பலவற்றைக் கொண்டுள்ளது.

(தொடரும்)

# மஹிந்தவின் அரசை விடவும் கோட்டா அரசு மோசமானது!

## மனோகணேசன் கவலை



இலங்கையில் கோட்டாபய ராஜபக்ஷ வின் அரசாங்கம் மஹிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கத்தை விட கடுமையான தாக தம்மை அடையாளப்படுத்தியுள்ளது என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பின ருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்க ளின் எதிர்காலம் தொடர்பில் கனேடிய தமிழ் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட காணொளி தொழில்நுட்பம் மூலமான கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதன்போது தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சர்வதேச விவகாரங்கள் இயக்குநர் ஏ.எம்.பாயிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

இதன்போது மனோ கணேசன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த தும் முதலில் மிருசுவில் கொலைக்குற்ற வாளியை விடுதலை செய்திருந்தார்.

இது ஒரு கடுமையான நடவடிக்கை யாகும். இதன்மூலம் தான் யார் என்று காண்பித்துள்ளார் என்று கூறியுள்ளார்.

# கந்தகாடு கொரோனா சிகிச்சை மையத்தில் போதைப்பொருள் நிரப்பிய டெனிஸ் பந்துகள்




வெலிகந்த – கந்தகாடு கொரோ னாச் சிகிச்சை மையத்தில் போதைப் பொருள் நிரப்பிய டெனிஸ் பந்துகள் இரண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வெளிப்புறத்திலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு குறித்த சிகிச்சை மையத்தில் எறியப்பட்ட டென்னிஸ் பந்துகளிலேயே இவ்வாறு போதைப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன.

தனி நபரொருவரால் அல்லது குழுவொன்றால் குறித்த சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று வரும் போதைப் பொருளுக்கு அடிமை யானவர்களின் பாவனைக்காக இவ் வாறு போதைப்பொருள் நிரப்பப்பட்ட டெனிஸ் பந்துகள் எறியப்பட்டிருக் கலாமென சந்தேகிப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித் துள்ளார்.

குறித்த டெனிஸ் பந்தினுள் ஹெரோயின் மற்றும் கஞ்சா நிரப்பப் பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள் ளது.

இந்த நிலையில், சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

# அறிகுறி அற்ற கொரோனா மிகவும் ஆபத்து மிக்கதாம்!

## விசேட வைத்தியர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு

கொரோனா தொற்றாளர் ஒருவரால் முதல் 10 நாள்களுக்குள் வைரஸ் பரவும் அபாயம் அதிகம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனை கட்டுப்படுத்துவதற்காக புதிய முறை ஒன்றை தயாரிப்பது அவசியம் என கொரோனா தொற்றை தடுக்கும் இராஜாங்க அமைச்சர் விசேட வைத் தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனா ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

நோய் அறிகுறிகள் அற்ற கொரோனா தொற்றாளர்கள் தொடர்பில் செயற்படும் போது முதல் 10 நாள்கள் சிகிச்சை நிலையத்திலும் ஏனைய 4 நாள்கள் வைத் திய கண்காணிப்பின் கீழ் வீட்டிலும் தனிமைப்படுத்துவ தற்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்புத் துறைமுக கிழக்கு முனையம்: தொழிற்சங்கக் கோரிக்கை மறுபரிசீலனை!

## செய்யப்படும் என்கிறார் அமைச்சர் ரோஹித

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக துறைமுக தொழிற்சங்கத்தினர் முன் வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப் படும் என்று துறைமுக மற்றும் கப்பற்துறை அபிவி ருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரி வித்தார்.

துறைமுக ஊழியர் தொழிற்சங்கத்தினர் முன்னெ டுத்த போராட்டம் தொடர்பில் தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர் –

அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு எதிராக முன்னெ டுக்கும் போராட்டங்களின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் மறைந்துள்ளன.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கும் போது துறைமுக ஊழியர் சங்கத்தினர் எதிர்க்கவில்லை.

எனவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனை யம் குறித்து துறைமுக தொழிற்சங்கத்தினர் முன் வைத்துள்ள கோரிக்கைகள் பரிசீலனை செய்யப் படும். – என்றார்.

# புகை, மது, மாமிசத்தைத் தவிர்க்குமாறு கூறினேன் இரண்டைக் கடைப்பிடிக்கத் தவறினார் பவித்திரா!

## அதனாலேயே கொரோனா வந்தது என்கிறார் தம்மிக்க

கொழும்பு, ஜன.25

சுகாதார அமைச்சர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமைக்கு தம் மால் பொறுப்பேற்க முடியாது என்று கேகாலையைச் சேர்ந்த நாட்டு மருத்துவர் தம்மிக்க பண்டார தெரி வித்துள்ளார்.

தம்மிக்க பண்டார சமூக வலைத் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த கொரோனாத் தடுப்புப் பாணி வழங்கப்பட்டபோது புகைப் பிடித்தல், மதுபான பாவனை, மாமி சம் உட்கொள்ளுதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் எனத் தம்மால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தாம் தவிர்க்கும்படி கூறிய இரண்டு விடயங்களைச் செய்ததன் காரணமாகவே இப்போது கொரோனாத் தொற்றுக்கு உள்ளா கியுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

# இன்று திறக்கப்படுகின்றன மேல்மாகாண பாடசாலைகள்!

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக மாத்திரம் இன்று (திங்கட்கிழமை) முதல் மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகள் திறக்கப்படவுள்ளன என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏனைய பகுதிகளில் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ள போதிலும் கொரோனா பரவல் கார ணமாக மேல்மாகாணத்திலுள்ள அனைத்து பாடசா லைகளும் மூடப்பட்டன.

எனினும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களை இலக்கு வைத்து மாத்திரம் இன்று முதல் மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளைத் திறக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி மேல்மாகாணத்திலுள்ள 11 கல்வி வலயங் களுக்கு உட்பட்ட ஆயிரத்து 576 பாடசாலைகளில் இன்று முதல் 907 பாடசாலைகள் மாத்திரம் 11 ஆம் தர மாணவர்களுக்காக திறக்கப்படவுள்ளன என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# பவித்திராவின் கணவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி!

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியின் கணவர் காஞ்சன ஜெயரத்னவுக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் தொற்றுக்கு உள்ளான அமைச் சர் பவித்ரா வன்னியாராச்சி தனிமைப்படுத்தப்பட்ட மையத்துக்கு சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சக வளாகத்தில் உள்ள அவரது அலுவலகம் மூடப்பட்டது.

இதற்கிடையில் அமைச்சருடன் தொடர்புடையவர் கள் தொடர்புள்ளவர்கள் பட்டியலில் சுகாதார அமைச் சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிற சுகாதார அமைச்சின் உயர் அதி காரிகள் உள்ளனர் எனப் பொதுச் சுகாதார பரிசோதகர் கள் தெரிவித்துள்ளனர்.




## பயிர் நோய்களை கட்டுப்படுத்த நுண்ணுயிரிகள்

இது வெறும் மட்க வைக்கும் திரவமாக மட்டும் செயல்படுவதில்லை. நெல், காய்கறிகள், மரப்பயிர்கள், பழப்பயிர்கள் என அனைத்து விதமான பயிர்களுக்கும் இதைப் பயன்படுத்தலாம்.

பார்ப்பதற்குப் பசை போன்ற தோற்றத்தில் இருக்கும் இதனை ஒரு பாட்டிலிருந்து 200 லீற்றர் கரைசலைத் தயாரிக்கலாம்.

இந்தக் கரைசலை ஒரு மாதத்துக்குள் பயன்படுத்திவிட வேண்டும். அந்தக் கரைசலிலிருந்து அப்படியே பெருக்கிக்கொண்டே போகலாம். அதாவது, எத்தனை லீற்றர் கரைசல் வேண்டுமானாலும் தயாரித்துக் கொண்டே செல்ல முடியும்.

வாழ்நாளில் ஒருமுறை இதை வாங்கிவிட்டால் போதும். மீண்டும் மீண்டும் வாங்கத் தேவையில்லை. இதிலிருந்து வாழ்நாள் முழுவதும் இயற்கை இடுபொருள் தயாரித்துக் கொண்டே இருக்கலாம்.

பாட்டில் கிடைக்கப் பெற முடியாதவர்கள் இதைப் பயன்படுத்தும் விவசாயிகளிடம் கரைசலை வாங்கிக்கூட இன்னொரு கரைசலைத் தயாரித்துக் கொள்ளலாம். இதைப் பாசன நீரில் கலந்து விடுவது மற்றும் இலை வழி தெளிப்பது என இரண்டு முறைகளிலும் பயிருக்குக் கொடுக்கலாம். இது, மண்ணில் உள்ள நுண்ணுயி ர்களைப் பெருக்கி மண்ணை வளமாக மாற்றுகிறது.

இதைக்கொண்டு சாணம், காய்கறிக் கழிவுகள், இலைதழைக் கழிவுகள், காய்ந்த குச்சிகள், பட்டைகள் ஆகியவற்றையும் விரைவில் மட்க வைக்க முடியும். மட்கிய கழிவுகளை நிலத்துக்கு உரமாகக் கொடுக்கலாம். நகரப்பகுதிகளில் வீட்டுத்தோட்டம் அமைத்திருப்பவர்களுக்கு இந்த வேஸ்ட் டீகம்போஸர் எளிமையான இடுபொருளாகப் பயன்படும்.

இது நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் உள்ளிட்ட சத்துகள் மண்ணுக்குக் கிடைக்கத் துணை புரியும்'

இதனை இலங்கையில் உள்ள விவசாயிகள் வாங்க வேண்டும் என்றால் கீழுள்ள தளங்களை நாடவும்

https://www.desertcart.lk/.../182360318-nature-friend...

https://www.amazon.in/Waste-Decomposer.../dp/B07F12V17W

ர.ராஜீவன் - விவசாய பட்டதாரி

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழர் தலைநகர் திருமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட சுகிர்தராஜனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு



சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட 'உதயன்' - 'சுடர் ஒளி' ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று மட்டக்களப்பிலுள்ள கிழக்கு ஊடகவியலாளர் அமையத்தில் நடைபெற்றது.

கடந்த 2006 இல் உயர்தரக் கல்வியை முடித்த பின்பு, பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை, நிலாவெளி கடற்கரையில் வைத்து ஆயுததாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை சுகிர்தராஜன் புகைப்படம் எடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப அரசு முயற்சித்த போது, இவர் எடுத்த புகைப்படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட அழுத்தங்களை இலங்கை அரசு சந்தித்தது.

சுகிர்தராஜன் போர்ச்சூழலிலும் துணிச்சலுடன் ஊடகப் பணியாற்றியபோதே 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்துக்கு அருகாமையில் வைத்து ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு - குருமண் வெளியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுகிர்தராஜன் அம்பாறை, வீரமுனையில் வசித்து-வந்த நிலையில் திருகோணமலையில் பணி நிமித்தம் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரிய நேந்திரன், சீ.யோகேஸ்வரன் மற்றும் மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், ஊடகத்துறை சமூகத்தினர் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

# பிரதமர் - சபாநாயகர் ஞாயிறு விசேட சந்திப்பு



கொழும்பு. ஜன. 24

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இன்று காலை கொழும்பு 07, விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கொரோனா வைரஸ் சவாலை எதிர்கொண்டு எதிர்வரும் 9 ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டத் தொடரை எவ்வாறு நடத்துவது என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு நாடாளுமன்றத்தின் சரியான செயற்பாட்டைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தைப் பிரதமர், சபாநாயகரிடம் சுட்டிக்காட்டினார்.

## ஆக்கிரமிப்புக்கு எதிராக

# அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்துப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் வகையில் அனைத்துத் தரப்புகளையும் ஒன்றிணைத்த முக்கிய கலந்துரையாடல் இன்று நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பது என்பது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு - கிழக்கில் தமிழரின் பாரம்பரிய இடங்கள் தொல்பொருள் ஆய்வு என்ற பெயரில் அபகரித்தல் மற்றும் காணி சுவீகரிப்புகள் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிராக செயற்பட்டு வாழ்வுரிமையைப் பாதுகாப்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வீ.விக்னேஸ்வரனும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கோட்டாவின் ஆணைக்குழு ஏமாற்று வித்தை

# பொறுப்புக்கூறலை குழிதோண்டி புதைக்க இடமளிக்கவே முடியாது!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் திட்டவட்டம்



கொழும்பு. ஜன. 24

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்த முன்னைய விசாரணைக் குழுக்கள், ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் தொடர்பாக, ஆராய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட விசாரணை ஆணைக் குழுவானது ஒரு ஏமாற்று வித்தையாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கை அரசு, தனது பொறுப்புக் கூறலைச் செய்யாது அதனைக் குழி தோண்டிப் புதைப்பதற்கே முயற்சிக்கின்றது. அதற்காகத் தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்காக இவ்விதமான காலதாமதப்படும் செயற்பாடுகளைத் திட்டமிட்டு முன்னெடுக்கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ்க்கட்சிகளின் தலைவர்கள் சிவில் அமைப்புக்கள் என்பன கூட்டாக நிலைப்பாட்டை விபரித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். மேலும் பொறுப்புக்கூறலைச் செய்விப்பதற்கும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைப் பெற்றுக் கொள்வதற்குமான எமது முயற்சிகள் மேலும் தீவிரமாகத் தொடரும் என்பதையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட இந்த ஆணைக்குழுவில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்ட செயலாளர் நிமால் அபேசிறி ஆகியோரும் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பாக இற்றை வரையில் இலங்கை அரசு பொறுப்புக்கூறவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இலங்கையில் கடந்த காலங்களில் ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக் குழுக்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்பன இலங்கை அரசின் பொறுப்புக்கூறலைச் செய்வதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான சிபார்சுகளைச் செய்துள்ளன.

குறிப்பாக, 2010ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அமைக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது பல்வேறு அமர்வுகளை நடத்தி 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி அதன் இறுதி அறிக்கையை அவரிடத்தில் சமர்ப்பித்தது. அதில் பல்வேறு விடயங்கள் சம்பந்தமான விடயங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம், 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் கற்றுக் கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், அந்தத் தருணங்களிலும் அதன் பின்னருமான காலத்தில் அந்த பரிந்துரைகள், தீர்மானங்கள் தொடர்பாக இலங்கை அரசு எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கவில்லை.

இந்நிலையில்தான் ஜனாதிபதி கோட்டாபய பழைய ஆணைக் குழுக்களின் பரிந்துரைகளை விசாரணை செய்வதற்குப் புதிய ஆணைக்குழுவொன்றை நியமித்திருக்கின்றார். இவ்வாறானதொரு ஆணைக்குழுவொன்று தற்போதைய சூழலில் தேவையற்றதொன்றாகும்.

இவ்வாறான ஆணைக் குழுவை நியமிப்பதன் மூலம் காலத்தைக் கடத்தலாம் என்று கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு எண்ணுகின்றது. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியன தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போன்று காண்பித்து தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றிவிடலாம் என்றும் இந்த அரசு கருதுகின்றது.

எம்மைப் பொறுத்தவரையில், புதிய விசாரணை ஆணைக் குழுவானது ஏமாற்று வித்தையாகும். அதற்கு எவ்விதமான பெறுமதியும் இல்லை. அதன் விசாரணைகளும், அறிக்கைகளும் எவ்விதமான பயனையும் தரப்போவதில்லை. அதன் மீது எமக்கு நம்பிக்கையும் இல்லை.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் பொறுப்புக் கூறல் செயற்பாட்டை குழி தோண்டிப் புதைப்பதையே விரும்புகின்றது. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எமது மக்களுக்கான பொறுப்புக்கூறல் செய்யப்பட வேண்டும். அதில் எவ்விதமான விட்டுக் கொடுப்புக்கும் இடமில்லை. அரசு புதிய விசாரணை ஆணைக்குழு போன்ற குறைபாடுடைய விடயங்களைப் பயன்படுத்தித் தப்பித்து விட முடியாது. பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான எமது தீவிர செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதில் மாற்றமில்லை.

-என்றார்.

# காலம் கடத்துவது தேவையற்ற பிரச்சினைக்கு வழிவகுக்கும்!

## ஜனாஸா விடயம் தொடர்பில் அரசுக்கு திஸ்ஸ எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் என்ற நிபுணர் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாமல், காலம் தாழ்த்துவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

- இவ்வாறு வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் கட்சி கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விசேட வைரஸ் நிபுணர்களின் அறிக்கையை அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்குச் சமர்ப்பிப்பதில் எவ்வித பயனும் இல்லை. அறிக்கையை ஆராயுமளவுக்கு அந்தக் குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை.

இலங்கையில் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதா? இல்லையா? என்ற பிரச்சினையை ஏற்படுத்தி, ஒரு சமூகத்தின் மத நம்பிக்கை அகௌரவப் படுத்தப்பட்டுள்ளது.

அரசு இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடிக்காமல், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழி காட்டலொன்றை அறிமுகப்படுத்தி, அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் - என்றார்.

## வவுனியாவில் விபத்து:

# இளைஞன் சாவு; இருவர் படுகாயம்!

வவுனியாவில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இரண்டு பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புளியங்குளம் முல்லைத்தீவு பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞர்கள் தண்டுவான் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து வீதிக்கரையில் இருந்த மின்சாரத் தூணுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நெடுங்கேணி கரடிப்புலவு பகுதியைச் சேர்ந்த தயாபரன் வயது 31என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன், ஏனைய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தமிழர்கள் தரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசு சாராத தமிழ் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலர் உள்ளடங்கிய ஒரு ஆலோசனை குழு கூட்டத்தை இன்று நடத்தியிருந்தோம். அரசியல் கட்சிகள் என்று பார்க்கும் போது 10 அரசியல் கட்சிகளுக்கு நாங்கள் அழைப்பு விடுத்திருந்தோம் இதில் ஒன்பது தமிழ் அரசியல் கட்சிகள் கலந்துகொண்ட போதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து கொள்ளவில்லை.

அவர்களுக்கு நேற்று முன்தினம் இடம்பெற்ற பூர்வாங்க கூட்டத்திலும் அழைப்பு விட்டிருந்தோம். அதாவது சட்டத்தரணி சுகாஷுடன் தொடர்பு கொண்ட பொழுதுதான் வெளிமாவட்டத்தில் இருக்கிறார் எனவும் கட்சியினுடைய தலைவர்களை தொடர்பு கொள்ளுமாறு கூறியிருந்தார். அதற்கமைய நேற்றையதினம் கட்சியினுடைய பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரனிடம் தொடர்பு கொண்டபோது பதில் கிடைக்கவில்லை.

எதிர்காலத்தில் அவர்களுடைய ஒத்துழைப்பு எங்களுக்கு கிடைக்கும் என நம்புகின்றோம்.

எந்த கட்சி, எந்த முன்னணி என்பதல்ல இங்கு பிரச்சினை.இது ஒட்டுமொத்த தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய, அசுர வேகத்திலே செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்கொள்ளுவதற்கான ஒரு தந்திரோபாய வேலைத் திட்டத்தை வகுப்பதற்காகத்தான் இந்த கூட்டம் ஒழுங்குபடுத்துள்ளது.

பங்குபற்றிய அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் தலா இரண்டு பிரதிநிதிகளை இணைத்து ஒரு நடவடிக்கை குழுவை அமைத்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பதை ஆராய வேண்டும். ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் சார்பிலே ஒரே நிலைப்பாடாக இருக்க வேண்டும் என்பது தான் இந்த அமைப்பின் நோக்கம்.

இந்த நடவடிக்கை குழு மக்கள் போராட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது, ஏனைய விடயங்களை எவ்வாறு கையாள்வது என்பதை பொதுமக்களிடம் இருந்து கருத்துக்களை பெற்றுக்கொண்டு ஒரு சரியான இலக்கை நோக்கி நகரும். – எனத் தெரிவித்தார்.

## காவலில் இருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த நபருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் ஒன்பது பேரும் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படவிருந்த நிலையிலேயே நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் இந்தத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இன்று இந்திய மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படும் நடவடிக்கை ஒத்திவைக்கப்படக் கூடும் என்று தெரியவருகிறது.

இதேவேளை நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை பரிசோதனைக் கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் மேலும் இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# சர்வதேசத்தை ஏமாற்றுவதற்கே அரசால் புதிய விசாரணைக்குழு!

## சிறிநேசன் காட்டம்



மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள ஆணைக்குழு என்பது தமிழர்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் கண்துடைப்பு நடவடிக்கை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

காலத்தை இழுத்தடிப்பதற்காகவும் சாட்சியங்களை மறைப்பதற்காகவும் கால நீடிப்பைக் கோருவதற்காகவுமான ஒரு போலித்தனமான முறையில் யுத்தக் குற்றங்களை, மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத்தியில் பல கேள்விகளையும் ஆதங்கத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

1958 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையில் தமிழ் மக்கள் திட்டமிட்டு இன அழிப்புச் செய்யப்பட்டனர். அடுத்ததாகத் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்கின்ற காணிகளை அபகரிக்கின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அடுத்த கட்டமாக கலாசார அழிப்பு நடைபெற்று வந்தது.

இவ்வாறு 1958 இல் ஆரம்பித்த தமிழ் மக்கள் மீதான இந்த அழிப்பின் தொடர்ச்சியாக காணி அபகரிப்பு, கலாசார அழிப்பு போன்ற விடயங்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன.

ஓர் இனத்தை இல்லாமல் ஆக்குவதென்றால் இனத்தை அழிப்பது, இரண்டாவதாக அவர்களுடைய காணிகளைத் திட்டமிட்டு அபகரிப்பது, மூன்றாவதாக அவர்களுடைய கலாசாரச் சின்னங்களை அழித்தொழிப்பது நடைபெறும்.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கம் பேரினமயமாக்கல், பௌத்தமயமாக்கலுக்குரிய வேலைத் திட்டத்தின் கீழான பாதையில் துரிதமாக பயணித்துக் கொண்டிருக்கின்றது.

உலக நாடுகளெல்லாம் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நேரத்தில் இந்த நாடு கலாசார அழிப்பு விடயங்களிலும் காணி அபகரிப்பு விடயங்களிலும் ஈடுபடுகின்றது.

புதிய அரசாங்கம் வந்ததும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களும் மீண்டும் குடியேறுகின்றனர். பழையபடி இன முறுகல், இன மோதல்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன அழிப்பு மூலமாக, கலாசார அழிப்பு மூலமாக, காணி அபகரிப்பு மூலமாக தமிழ் பேசுகின்ற மக்கள் ஒடுக்கப்படுகின்ற, அடக்கப்படுகின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விடயங்கள் சர்வதேச மயப்படுத்தப்பட்ட நிலைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்திற்கு மேல் கடந்துவிட்டது. இதுவரைக்கும் ஜனாதிபதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு தொடர்பான விடயங்கள், யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எவ்விதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இதற்கிடையில், காணாமல் போனவர்களை மறந்துவிடுங்கள், காணாமல் போனவர்களை மண்ணைத் தோண்டித் தேடிப்பாருங்கள் என விமல் வீரவன்ஸ போன்றவர்கள் சொல்லியுள்ளார்கள்.

இந்த சூழலில், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கையிடம் பல கேள்விகள் முன்வைக்கப்படவுள்ளன. இந்நிலையில், காலத்தை இழுத்தடிப்பதற்காகவும், சாட்சியங்களை மறைப்பதற்காகவும், கால நீடிப்பைக் கோருவதற்காகவும் ஒரு போலித்தனமான முறையில் மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு என்றொரு குழுவை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது.

இது தமிழ் மக்களையும் சர்வதேசத்தினையும் ஏமாற்றுகின்ற ஒரு கண்துடைப்பாகும். இதனை மக்கள் ஒரு துளியும் நம்பமாட்டார்கள். அரசாங்கத்தின் பக்கம் நின்று தலையாட்டிக் கொண்டிருப்பவர்கள் அனைத்துக்கும் தலையாட்டுவார்கள்.

அதனைவிட, ஜெனிவாவுக்கும் சென்று இங்கு ஒரு பிரச்சினையும் இல்லையென்று சொல்வதற்குக்கூட சாட்சியமாக இருப்பார்கள். இதுவே உண்மை நிலையாகும். – என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சரவையில் மாற்றங்கள் என வெளியான செய்தி உண்மை இல்லை!

## பிரதமர் மஹிந்த மறுப்பு



எதிர்வரும் வாரம் அமைச்சரவையில் மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்படும் என வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை பதவிகள் பலவற்றில் மாற்றம் ஏற்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர்கள் பலர் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் வெளியான தகவலை பிரதமர் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடல் எதுவும் நடைபெறவில்லை என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய அமைச்சரவை மாற்றம் என்ற தகவல் அடிப்படையற்ற ஒன்றாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

# மேல் மாகாணத்தில் 1,001 நிறுவனம் அடையாளம் 800 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

## என்கிறார் பொலிஸ் பேச்சாளர் அஜித் றோஹண

மேல்மாகாணத்தில் கடந்த 12 தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சோதனை நடவடிக்கைகளின் போது தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்ட 1, 001 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன், அவற்றில் 800 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மேல்மாகாணத்தில் காணப்படும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார பிரிவினர் மற்றும் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்து வரும் இந்த சோதனை நடவடிக்கைகளுக்கமைய இதுவரையில் 6 ஆயிரத்து 919 நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றுள் 5 ஆயிரத்து 918 நிறுவனங்களில் சுகாதார சட்டவிதிகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்தன. சுகாதார விதிமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டனஎன1,001நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 800 நிறுவனங்களுக்கு எதிராக இது வரையில் வழக்குத் தொடரப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 878 நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றில் 785 நிறுவனங்கள் முறையான சட்டவிதிகளை கடைப்பிடித்திருந்தமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

86 நிறுவனங்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயற்பட்டிருந்ததுடன், அவற்றுக்கு எதிராகவும் எதிர்வரும் தினங்களில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

மேல்மாகாணத்தில் வார இறுதி தினங்களில் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கைகளும், மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளில் அன்டிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. – என்றார்.

# அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவு கவிதைப்போட்டியின் வெற்றியாளருக்கு நேற்று பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கல்!

காலைக்கதிர் பத்திரிகையில் நடாத்தப்பட்ட அமரர் பேணாட் மதுரநாயகம் நினைவு கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை காலைக்கதிர் பத்திரிகை நிறுவனத்தில் வைத்து வழங்கப்பட்டன.

அமரர் பேணாட் மதுரநாயகம் அவர்களின் பாரியார், வெற்றியாளர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கி கௌரவித்தார்.

இந்தப் போட்டி பாடசாலை மாணவர்களுக்கும், திறந்த போட்டியாகப் பெரியவர்களுக்கும் என இரு பிரிவுகளாக நடைபெற்றன. இந்நிகழ்சிற்கு பேணாட் மருதநாயகம் அவர்களின் புதல்வர் ஜொனி மருதநாயகம் அவர்கள் தலைமை தாங்கியிருந்தார்.

அமரர் பேர்ணாட் அவர்கள் கலையுலகல் மிகுந்த ஈடுபாட்டுடன் இருந்தமையினால் அவரின் நினைவாக, ஏனையவர்களின் கவிதை நயத்தை ஊக்கப்படுத்தும் விதமாக இப்போட்டியினை வருடா வருடம் நடாத்துவதற்கு உத்தேசித்துள்ளதாக – சட்டத்தரணி ஜொனி மருதநாயகம் தெரிவித்தார்.

அதே நேரம் போட்டியில் பங்குபற்றி வெற்றிபேற்றவர்களையும் பங்குபற்றியவர்கள் அனைவருக்கும் தமது குடும்பத்தினர்சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.










படங்கள்: டிலக்சன், கலையமுதன்

# இந்துக்களின் புராதன இடங்களில் வழிபாடுகள்: ஜனாதிபதி, பிரதமர் அனுமதியளிக்க வேண்டும்!

## சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் கோரிக்கை

இலங்கையில் இந்துக்களின் புராதன வழிபாட்டு இடங்களில் பூசை வழிபாடுகளை செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அனுமதி வழங்க வேண்டும் என்று சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் அ. மாதவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா நொச்சிமோட்டையில் அமைந்துள்ள அபிராமி அம்மன் ஆலயத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொல்லியல் திணைக்களம் புராதன இடங்களுக்கு சென்று அங்கு வழிபாடுகளை செய்வதற்கு தடைவிதித்து வருகின்றது.

நாங்கள்வெறுமனே ஆலயங்களில் மட்டும் வழிபட்டு வருபவர்கள் அல்லர், இங்குள்ள புராதான இடங்களிலும் வழிபட்டு வருகின்றோம். இந்நிலையில், புராதான இடமான வெடுக்குநாறி மலையில் உள்ள ஆதிலிங் கேஸ்வரர் ஆலய பூசகர் கைது செய்யப் பட்டமை மிகவும் கண்டிக்கத்தக்கது என்று சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்ட தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தொல்லியல் திணைக்களமானது கொடுப்பனவை பெற்றுக்கொண்டு செயற் படுகின்றது. ஆனால் நாங்கள் மண்ணை, மரத்தை, வழிபட்டு வருவதோடு நாங் கள் எந்தவித கொடுப்பனவும் இல்லாமல் எங்கள் புராதன இடங்களை பாதுகாத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் உள்ள புராதன இடங்களை பாதுகாப்பது மட்டுமல்லாமல் எங் களது கலாசாரம் சார்ந்த விடயங்களை பாதுகாக்கும் நோக்குடனே எங்களது ஆலயங்களாக இருக்கட்டும் அல்லது அமைப்புக்களாக இருக்கட்டும், பரிபா லன சபைகள் அனைத்துமே செயற்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவிலே குறுந்தூர்மலையிலே ஆதிகாலம் தொட்டு ஆதிலிங்கேஸ் வரர் வழிபாடு முறைகள் இருந்து வரு கின்றது.

ஆனால் தொல்பொருள் திணைக் களம் அங்கு சென்று வழிபாட்டு முறை களிலே இருக்கக்கூடிய எங்களது வழி பாட்டு சின்னங்களை சிதைத்து இருப்பது கவலையளிக்கும் விடயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, ஜனாதிபதி மற்றும் பிரதமரும் நேரடியாக கவனித்து எங்களது வழிபாட்டு முறைகளை அறிந்த நீங்கள் எங்களது வழிபாட்டுக்காக அனைத்து ஆலயங்களிலும் சென்று வழிபடுவதற்கு அனைவருக்கும் சமத்துவமான உரிமையை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

CNR world wide Express
Courier & Cargo
International Courier & Cargo Service.
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.

இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை


| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1979.03.20 | பிறந்த திகதி - 1987.11.15 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - கேட்டை | நட்சத்திரம் - பூரம் |
| செவ் - 8 இல் | செவ் - -- |
| பாவம் - 73 | பாவம் - 23 1/2 |
| கல்வி - A/L | கல்வி - கனடா பட்டதாரி |
| தொழில் - U.K. PR | தொழில் - கனடா PR |
| எதிர்பார்ப்பு - U.K. வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - கனடா வரவிரும்பும் பெண் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

Anna EXPRESS Courier Services

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
077 8889388
075 3305500
070 3305500
3-6 நாட்கள்
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் | சங்கத்தானை | கனகராயன்குளம்
சங்கானை | பளை | மல்லாவி
கல்வியங்காடு | கிளிநொச்சி | மன்னார்
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | வவுனியா
நெல்லியடி | முல்லைத்தீவு | கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2021 இல் வெளியிடப்பெற்றது.

# இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது!

## என்கிறார் திலும் அமுனுகம

இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அனைத்து இன மக்களின் உரிமைகளுக்கும் மதிப்பளித்து அரசாங்கம் செயற்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பல எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். இடம்பெற்று முடிந்த பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியமை அரசியல் வரலாற்றில் எவரும் எதிர்பார்க்காத விடயமாகும். சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தை நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்து செயற்படுவதாகக் குறிப்பிட்டு எதிர்தரப்பினர் பெரும்பான்மை சமூகத்துக்கும் சிறுபான்மை சமூகத்துக்கு மிடையில் முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். நல்லாட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்கத் தமிழ் பேசும் மக்கள் அதிக பங்களிப்பு செய்தார்கள். ஆனால் அவர்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை. பல உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. பிரதமானமாக மாகாண சபைத் தேர்தலை குறிப்பிட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப் படுத்தப்பட்டது. ஏனைய மாகாணங்களை காட்டிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்துக்கு மாகாண சபை தேர்தல் அவசியமாக இருந்தது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து மாகாண சபை தேர்தலை நடத்தினார். தமிழ் மொழி பேசும் மக்கள் தமக்கான பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் தெரிவு செய்துகொண்டார்கள்.



எமது ஆட்சியில் வழங்கிய மாகாண சபைதேர்தல் உரிமையை கூட நல்லாட்சி அரசாங்கம் பாதுகாக்கவில்லை. அரசியல் காரணிகளுக்காக மாகாண சபை முறைமை பிற்போடப்பட்டது. மார்ச் மாதம் மாகாண சபை தேர்தலை நடத்த எதிர்பார்க்கப்பட்டது. கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக தேர்தல் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது. வெகுவிரைவில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும்.

அனைத்து இன மக்களும் பொருளாதார மட்டத்தில் முன்னேற்றமடைந்தால் சமூகத்தின் மத்தியில் வீண் முரண்பாடுகள் தோற்றம் பெறாது. சுபீட்சமான எதிர்கால கொள்கைத்திட்டத்தில் நாட்டு மக்களின் முன்னேற்றம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஆகவே, இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது. அனைத்து இன மக்களின் உரிமைகளுக்கும் மதிப்பளித்து அரசாங்கம் செயற்படும். – என்றார்.

# ஊடகவியலாளர் எட்வின் ஆரியதாஸவின் மறைவு ஊடகத்துறை, சினிமாத்துறைக்குப் பேரிழப்பாகும்!

## பிரதமர் மஹிந்த இரங்கல்



காலஞ்சென்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாநிதி எட்வின் ஆரியதாஸவின் இறுதி கிரியைகளை அரச செலவில் முன்னெடுக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார். இவரது இழப்பு ஊடகத்துறை மற்றும் சினிமாத்துறைக்கு பேரிழப்பாகக் கருதப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

ஊடகவியலாளர் கலாநிதி எட்வின் ஆரியதாஸ தனது 98 ஆவது வயதில் கடந்த வெள்ளிக்கிழமை காலமானார். பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

1922 டிஜெம்பர் மாதம் 3ஆம் திகதி காலி உனவடுன பகுதியில் பிறந்த எட்வின் ஆரியதாஸ தனது ஆரம்ப கல்வியை உனவடுவ பொனவிஸ்டா பாடசாலையிலும், காலி மஹிந்த வித்தியாலயத்திலும், 1945 ஆம் ஆண்டு சிங்களம் மற்றும் ஆங்கில மொழித்துறையில் பட்டம் பெற்றுள்ளார்.

1949 மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஊடகவியலாளராக லேக்ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்து கொண்டார். தினமின, டெய்லி நியூஸ், சன்டே ஒப்சேவர், சிலுமின மற்றும் மக்கள் பத்திரிகைகளில் ஆசிரியராக சேவையாற்றியுள்ளார். அத்துடன் லேக்ஹவுசின் நிறுவனத்தில் ஆலோசனை பிரிவின் உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார்.

1978 தொடக்கம் 1982 ஆம் ஆண்டுகளில் நவயுகய பத்திரிகையின் பிரதான ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர் ஊடகத்துறையில் பெரும் சேவையாற்றியுள்ளார். பிற்பட்ட காலத்தில் பல ஊடகங்கள் தோற்றம் பெறுவதற்கும் முன்னோடியாக செயற்பட்டுள்ளார். 1960 ஆம் ஆண்டு பொதுசன தொடர்பாடல் தொடர்பிலான பாடநெறியை கற்பித்த முதல் கலாநிதியாக இவரை கருத முடியும்.

களனி பல்கலைக்கழகம், கொழும்பு மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகம், திறந்த பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஊடகத்துறை தொடர்பான பாடநெறியை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாகச் செயற்பட்டார். ஊடகத்துறையில் பல ஊடகவியலாளர்களை இவர் உருவாக்கியுள்ளார். ஊடகத்துறை மாத்திரமல்ல பல்துறைகளிலும் நிபுணத்துவம் பெற்றவர்.

70 வருடகாலமாக ஊடகத்துறையில் சேவையாற்றியுள்ளார். பத்திரிகைத் துறையில் தனது ஊடக பணியை ஆரம்பித்த இவர் தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக வலைத்தளம் ஊடாகவும் தனது பணியை முன்னெடுத்துள்ளார். நடமாடும் நூலகமாக தனது அறிவாற்றலை நாட்டு மக்களுக்கு வழங்கினார். இவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். இவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

# அரசு காலம் கடத்துகின்றமை பிரச்சினைக்கு வழிவகுக்கும்!

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் என்ற நிபுணர் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாமல், காலம் தாழ்த்துவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும் என வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.



சோசலிச மக்கள் கட்சி கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விசேட வைரஸ் நிபுணர்களின் அறிக்கையை அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்குச் சமர்ப்பிப்பதில் எவ்வித பயனும் இல்லை. அறிக்கையை ஆராயுமளவுக்கு அந்தக் குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் அல்லர்.

இலங்கையில் கொரோனாவால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வதா? இல்லையா? என்ற பிரச்சினையை ஏற்படுத்தி, ஒரு சமூகத்தின் மத நம்பிக்கை அகௌரவப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடிக்காமல், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிகாட்டலொன்றை அறிமுகப்படுத்தி, அதற்கான அனுமதியை வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# அக்கரப்பத்தனை பொலிஸில் ஆயுதம் திருட்டு ஆசிரியர், பொலிஸார் உட்பட மூவர் கைது!

அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பாக ஆயுதங்கள் திருடப்பட்ட குற்றச்சாட்டில் கல்வி ஆசிரியர் மற்றும் பொலிஸ் கான்ஸ் டபிள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி – மீட்டியாகொட பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை கைத்துப்பாக்கி மற்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதத்துடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர் மீட்டியாகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர், அவர் ஹிக்கடுவ, கோனபினுவலவில் வசிக்கும் ஒரு கல்வி ஆசிரியரிடமிருந்து தானியங்கி கைத்துப்பாக்கியை பெற்றார் எனத் தெரியவந்தது.

அதற்கமைவாக கல்வி ஆசிரியரும் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்ட ஒரு பொலிஸ் கான்ஷ்டபிள் ஒருவரிடமிருந்து துப்பாக்கியைப் பெற்றார் எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த கான்ஷ்டபிள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தபோது அங்கு அவர், துப்பாக்கியை திருடியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந் நிலையில் தற்போது கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஷ்டபிள், ஆசிரியர் உள்ளிட்ட மூவரை பலபிட்டிய நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருந்தது.

# உலக சுகாதார ஸ்தாபனத்தின் தகவல்படி இலங்கை அபாயக் கட்டத்தில் உள்ளது!

## அரச மருத்துவ சங்கம் எச்சரிக்கை

உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வின் படி இலங்கை கொரோனா தொற்றாளர் வீதத்தில் அபாயக் கட்டத்தை எட்டியுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வீதமானது 5.5 விளிம்பு நிலை வீதத்தைக் கடந்துவிட்டதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் ஹரித அளுத்கே கூறியுள்ளார்.

இந்த நேர்மறை வீதமானது ஒரு மாதத்துக்கு முன்பாக 3.0 மட்டத்தில் இருந்ததுடன், பின்னல், 4ஆம் மட்டத்துக்கு அதிகரித்து, இப்போது 5ஆம் மட்டத்தைக் கடந்து 5.5 அளவில் உள்ளது என்றும் இது அதிக அபாயமான நிலையாகும் என அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் வைரஸ் தொற்று இன்னும் சமூகத்திலிருந்து வெளியாகவில்லை என்றும் குணமடைந்த அனைத்து நோயாளர்களும் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணிகளுடன் தொடர்புடையவர்கள் என்றும் தொற்று நோயியல் பிரிவு கூறியுள்ளது.

எனினும் அண்மைய தொற்றுக்கள் மேற்படி இரு கொத்தணிளுடனும் தொடர்பற்றவை என்றும் அவர் கூறியுள்ளார்.

துரதிர்ஷ்டவசமாக மேல் மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கு வைரஸ் பரவலைத் தடுக்க நாடு தவறிவிட்டது என்றும் எனவே, இப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகமான உப கொத்தணிகள் உருவாகத் தொடங்கியுள் ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.